★ விலை ரூபா 1-00

இன்று முதல்
வானொலியில்
விமாக்கி ஸ்தாபனம்
அளிக்கும்
வரணியூரான் எழுதும்
"உயர்ந்த உள்ளங்கள்"
(நாடகம்)
ஒவ்வொரு வியாழக்கிழமையும்
இரவு 9-15க்கு
ஒலிபரப்பாகும்
விமாக்கி,
27/3, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம். 6218

# ஈழநாடு
THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 மாசி 5 ஜ. அவ். 3 இதழ் 7

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 17—2—83

செவிப்புலன் அற்ற
பிள்ளைகளுக்கான
கல்வி
செவிப்புலன் அற்ற பிள்ளைகளுக்கு தமிழில் கதைக்க, எழுத, வாசிக்க விசேட பயிற்சிபெற்ற ஆசிரியரால் தனித்தனி கற்பித்துக் கொடுக்கப்படும். 3 வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகளுக்குமட்டும்.
தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:
திருமதி செல்வி மகேசன்
"செல்வ மஹால்"
சுன்னாகம் தெற்கு,
(Via Circuit Bangalow Lane)
சுன்னாகம். 6226

★ உபாலி விமானம் மர்மம் - ஒரு தொடர்கதை:

# கடலில் விழுந்தாலும் உயிர் பிழைக்கும் சாத்தியம் உண்டு

## புலேந்திரன் கொலை: மூவரைப் பிணையில் விடுவிக்ககோரிமனு

[வவுனியா] வவுனியாவில் சுட்டுக்கொல்லப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர் புலேந்திரன் கொலை தொடர்பான விசாரணை நேற்று வவுனியா மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் பதில் நீதவான் திரு. ஆர் வி வில்வராஜா முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

சந்தேகநபர்களான ஐவரும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

கிராமசேவை அலுவலரான துரைராஜா தேவராஜா, சரத் சந்திரா, குணசேகரா, திஸ்ஸ, தம்பிராசா, பெனடிக்ற்,

(8-ம் பக்கம் பார்க்க)

## அரசியலமைப்புத் திருத்தம்: அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு) பாராளுமன்ற இடைத்தேர்தலை நடத்துவதற்கு அரசியலமைப்புக்குக் கொண்டுவரப்படவிருக்கும் 5வது திருத்தத்தை நேற்று அமைச்சரவை அங்கீகரித்தது.

இதன்படி பாராளுமன்றத்தில் காலி இடம் ஏற்படும்போது அந்த உறுப்பினர் சார்ந்த கட்சியின் செயலாளர்நாயகம் 30 நாட்களுள் புதியவரை நியமிக்கவேண்டும்.

அப்படி நியமிக்கப்படாத பட்சத்தில் தேர்தல் ஆணையாளர் அதுபற்றி ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டுவருவார். ஜனாதிபதி ஒருமாத காலத்திற்குள் தேர்தலை நடத்துமாறு பணிப்பார்.

1946ம் ஆண்டு இலங்கைப் பாராளுமன்ற கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் தேர்தல் ஆணையாளர் இத்தேர்தலை நடத்துவார்.

இந்த 5வது திருத்தம் இம்மாதம் 24ம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது. [*]

## கார்-லொறி விபத்து: திணைக்கள அதிகாரி ஸ்தலத்தில் பலி!

(யாழ்ப்பாணம்) கார்-லொறி விபத்தில் ஒருவர் ஸ்தலத்தில் பலியானார். இருவர் பலத்த காயங்களுடன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்

இச்சம்பவம் பளைக்கு அண்மையில் நேற்று முன்தினம் நிகழ்ந்தது.

யாழ் மதிப்பீட்டுத் திணைக்கள அதிகாரியான கனகரத்தினம் துரைசிங்கம் (வயது 45) ஸ்தலத்தில் பலியானவராவார். எஸ் பி தம்பிஐயா, முருகேசு துரைசிங்கம் ஆகிய இருவரும் படுகாயமடைந்து சுயநினைவற்ற நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இருவருக்கும் சத்திரசிகிச்சை அளிக்கப்பட்டது

குறிப்பிட்ட மூவரும் 'பென்ஸ்' காரொன்றில் யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சியை நோக்கிச் சென்றதாக

[8-ம் பக்கம் பார்க்க]

## ஆஸி. விமானக்குழு அறிக்கைமீது நம்பிக்கை

### விபத்துபற்றி முரண்பட்ட தகவல்கள்!

(வெளிநாட்டுச் செய்திச் சேவைகளின் தொகுப்பு)

உபாலி 'ஜெட்' விமானத்துக்கு என்ன நேர்ந்தது?

சர்வதேச ரீதியில் நடத்தப்படும் தேடுதல் வேட்டையில் கடைசியாகக் கிடைத்த செய்திகளின்படி; உபாலி விமானம், மலாக்கா நீரிணையில் விழுந்தது ஓரளவு ஊர்ஜிதமாகிவிட்டபோதிலும் நேற்றுக் காலை 9-30 மணியளவில் ஒளிப் பிழம்பு ஒன்று காணப்பட்டதாகவும், அவசர சமிக்ஞையொன்று மிக மெல்லிய தொனியில் கேட்டதாகவும், தேடுதலில் ஈடுபட்ட அவுஸ்திரேலிய விமானக் குழுவைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்திருப்பது நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது என்றும், விமானத்தில் சென்ற சிலர் உயிருடன் இருக்கலாம் என்றும் நம்பிக்கை தெரிவிக்கப்படுகிறது.

அதேநேரத்தில் அந்தமான் தீவில் இந்த விமானம் இறக்கப்பட்டிருக்கலாம் எனும் தகவல் கடைசி நேரத்தில் நிராகரிக்கப்பட்டுள்ளது.

கோலாலம்பூரிலிருந்து பயணத்தை ஆரம்பித்த உபாலி ஜெட் விமானம் 70 மைல் தூரத்தைக் கடந்தும் தனது கட்டுப்பாட்டுத் தொடர்புகளை இழந்த நிலையில் மிக அருகில் உள்ள ஏதாவதொரு இடத்தில் இறக்கப்பட்டிருக்கலாம் அல்லது விபத்தால் விழுந்திருக்கலாம் என்றும் அவ்வாறாயின் இவ் விமானப்பாதையில் அந்தமான் தீவுகளே மிக அண்மையில் உள்ளதாகவும் அங்கு தேடுதலை மேற்கொள்வதன்மூலம் துப்புக்கள் கிடைக்கலாம் என்றும் முன்னர் அறிவிக்கப்பட்டது.

இந்தநிலையில்; உபாலி விமானத்துக்கு நேர்ந்த கதி இன்

[8-ம் பக்கம் பார்க்க]

## துரித கடுகதி ரயில் 15 நிமிடம் முன்னதாக சேர்ந்தது

(யாழ்ப்பாணம்) கொழும்பு-காங்கேசன்துறை துரித கடுகதி ரயில் சேவை நேற்று எதிர்பார்க்கப்பட்ட நேரத்துக்கு பதினைந்து நிமிடங்கள் முன்னதாகக் குறிப்பிட்ட இடத்தை வந்தடைந்தது.

கொழும்பு கோட்டையிலிரு

[8-ம் பக்கம் பார்க்க]

## பொத்துவில் எம். பி. ஜலால்தீன் குடியுரிமை நீக்குமாறு ஜனாதிபதி கமிஷன் சிபார்சு!

(கொழும்பு) பொத்துவில் முதலாவது எம். பி. டாக்டர் ஜலால்தீன், அதிகார துஷ்பிரயோகம், ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகியிருப்பதாக அவரது குடியுரிமையை நீக்குமாறு ஜனாதிபதி கமிஷன் சிபார்சு செய்துள்ளது.

பொத்துவில் எம். பி. டாக்டர் ஜலால்தீன் மீதான புகார் பற்றி விசாரணை செய்துள்ள ஜனாதிபதி கமிஷன் அவரைக் குற்றவாளியாகக் கண்டுள்ளது.

கமிஷன் முடிவுகளைக் கொண்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி நேற்று அமைச்சரவையில் தெரிவித்தார்.

டாக்டர் ஜலால்தீன் மீது சுமத்தப்பட்ட 12 குற்றச்சாட்டுக்களில் 10 குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டுள்ளன என்றும் கமிஷனின் அறிக்கை விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமென்றும் ஜனாதிபதி தெரிவித்தார். (இ)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

யாழ். பெரியகடை அருகில், நாவலர் வீதி, கஸ்தூரியார் வீதி சந்தியில் (அப்பையா கடைச்சந்தி) சிறு 3 அறை வீடு ஒரு பரப்பில் விற்பனைக்குண்டு. விபரம்: 19, கடைச் சாமி வீதி, நீராவியடி. 6208

### வைத்தியம்

எவ்வளவு காலம் சென்றதானாலும் 9 விதமான மூல வியாதியையும் ஆப்ரேசன் இல்லாமல் 15 தினத்தில் சிகிச்சை செய்து மாற்றலாம். நேரில் சந்திக்கவும். M. K. M அப்துல்லா மூல வைத்தியர், புத்தூர். 6215

### வாடகைக்கு

மாம்பழம் சந்திக்கு அருகாமையில் சகல வசதிகளுடன் வீடு ஒன்று வாடகைக்கு கொடுக்கப்படும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி 'சாந்தன்ஸ்' மாம்பழம் சந்தி அரியாலை. 6214

### WANTED

M. B. B. S Doctor – Wanted no night duties. Applications giving details of experience and the names and addresses of two Medical referees to The Medical Centre, 415, K. K. S. Road, Jaffna. Tel: 24301. (6206)

## பதவி வெற்றிடம்

கொள்வனவு லிகிதர்

தரம் 111,

சேவகர்

மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பங்கள் யாழ். மாவட்டப் பகுதியிலுள்ள இலங்கைப் பிரஜைகளிடமிருந்து கோரப்படுகின்றன. காரியாலயத்தில் ரூபா 3/- செலுத்தி விண்ணப்பப் படிவங்களையும், விபரங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவுத் திகதி: 25 - 02 - 1983 ஆகும்.

பொதுமுகாமையாளர்

தென்மராட்சி மேற்கு ப. நோ. கூ. சங்கம், கைதடி.

1983 – 02 – 15 6217

## அறிவித்தல்

தெல்லிப்பளை ப நோ. கூ. சங்கத்தின் 1, 2, 3 ஆகிய கிளைகளின் மகளிர் பாவனையாளர் தகவல் கல்வித்திட்டத்தினரால் நடாத்தப்பட்டு 1983 - 2- 12- ம் திகதி அதிஸ்டம் பார்க்கப்பட்ட சீட்டிழுப்பு முடிவு பின்வருமாறு:

1-ம் பரிசு சீட்டு இல. 2883
2-ம் பரிசு சீட்டு இல. 2867
3-ம் பரிசு சீட்டு இல. 2581

மகளிர் பாவனையாளர்

தகவல் கல்வித்திட்டத்தினர்

கிளை 1 2, 3.

15 - 2 - 83. 6216

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்

காலஞ்சென்ற வயித்திலிங்கம் சிவஞானசிங்கம் பெண் பத்மாவதியின் மரணசாதன விடயமாக

சின்னத்தம்பி சிதம்பரப்பிள்ளை, கரணவாய் வடக்கு.

மனுதார்.

மரணசாதன நியாயாதிக்கம் இல. 1127/ரீ

எதிராக

1. வயித்திலிங்கம் சிவஞானசிங்கம்.
2. வயித்திலிங்கம் சிவஞானசிங்கம் மகள் யசோதா.
3. வயித்திலிங்கம் சிவஞானசிங்கம் மகள் சுபத்திரா.
4. வயித்திலிங்கம் சிவஞானசிங்கம் மகள் வித்தியா யாவரும் கரணவாய் வடக்கு.

எதிர்மனுதார்

மேலே இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்தவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1981-ம் ஆண்டு மார்கழி மாதம் 11-ந் திகதி முற்பகல் 9-30 மணிக்கு இம்மன்றின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றானதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1981-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 8-ந் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி பதிவாளர்.

வரைவு:

வ. மகாலிங்கம், மனுதாரின் சட்டத்தரணி.

11-12-81
காரணம் காட்டும் காலம் 12-2-82க்கு நீடிக்கப்பட்டது.

ஒப்பம்
சோ. இ.
மா. நீ.

12-2-82
காரணம் காட்டும் காலம் 2-4-82க்கு நீடிக்கப்பட்டது.

ஒப்பம்
எம். டி. ஜே.
மா. நீ.

2-4-82
காரணம் காட்டும் காலம் 2-7-82க்கு நீடிக்கப்பட்டது.

ஒப்பம்
சோ இ.
மா. நீ.

2-7-82
காரணம் காட்டும் காலம் 10-9-82 வரை நீடிக்கப்பட்டது.

ஒப்பம்
சோ. இ.
மா. நீ.

10-9-82
காரணம் காட்டும் காலம் 10-12-82 வரை நீடிக்கப்பட்டது.

ஒப்பம்
சோ. இ
மா. நீ.

10-12-82
காரணம் காட்டும் காலம் 18-2-83 வரை நீடிக்கப்பட்டது.

ஒப்பம்
சோ. இ.
மா. நீ.

(6196)


# பொலிஸ் தாக்குதலில் இளைஞன் மரணம்?

## விசாரணை நடக்கிறது

(சாலி)

பொலிஸ் கான்ஸ்டபிள்கள் இருவரின் தாக்குதல்களுக்கு இலக்கான ஒரு இளைஞர் இறந்துவிட்டதாக கூறப்படுகிறது.

இத்திடுக்கிடும் சம்பவம் மொறவக்க பொலிஸ் பகுதியில் நடைபெற்றுள்ளது.

தயாசேன என்ற இருபத்திரண்டு வயது இளைஞனே உயிர்துறந்த நபர் என்று கூறப்படுகிறது. இது சம்பந்தமாக காலஞ்சென்ற இளைஞனின் தந்தை ஐந்திரசஸ் மாத்தறை பொலிஸ் அதிபர் காரியாலயத்தில் முறைப்பாடுசெய்திருக்கின்றார்.

மாட்டுத்திருட்டுச் சம்பந்தமாக மகனைவிசாரிக்க வேண்டியிருப்பதாகக்கூறி, இருகான்ஸ்டபிள்கள் வந்து தூங்கிக்கொண்டிருந்த தனது மகனை தலைமுடியை இழுத்து தம் கண்ணெதிரிலேயே தடியாலும், கை கால்களாலும் தாக்கினர் என்றும், பின்னர் வீதி வழியே மிருகத்தனமாகத் தாக்கி இழுத்துச் சென்றனர் என்றும் சிலமணி நேரத்தில் தனது மகன் இறந்துவிட்டதாகத் தனக்குதகவல்கிடைத்ததென்றும் இதுபற்றி பார்க்கச் சென்றபோது தனது மகன் கங்கைக்கரையொன்றில் சடலமாக இருப்பதைக் கண்டதாகவும் தனது புகாரில் தெரிவித்திருக்கிறார்.

பொலிஸ் தாக்குதலாலேயே இந்த மரணம் ஏற்பட்டிருப்பதாக தான் நம்புவதாகவும் அவர் கூறியுள்ளார்.

இது சம்பந்தமாகமாத்தறை உதவிப் பொலிஸ் அதிபர் திரு. தென்னக்கோன் தீவிர விசாரணையில் ஈடுபட்டுள்ளார்.

# "நீர்வேலி கொலை, கொள்ளை வழக்கு வாக்குமூலம் பெறப்பட்ட முறையை நீதிமன்றம் அறியவேண்டும்"

## தொகுப்புரையில் சட்டத்தரணி சத்தியேந்திரா

(கொழும்பு)

"நீர்வேலி வங்கி கொலை, கொள்ளை வழக்கு எதிரிகள், தமது வாக்குமூலங்கள் சித்திரவதை செய்யப்பட்டும், பயமுறுத்தப்பட்டும் தமது விருப்பத்துக்கு மாறாகவே பெறப்பட்டனவென்று ஒருமித்துத் தெரிவித்துள்ளார்கள். எனவே அவர்களது வாக்குமூலங்கள் பெறப்பட்ட முறைபற்றியும், சரியான முறையிலா அவை பெறப்பட்டன என்பது பற்றியும் நீதிமன்றமே தீர்மானிக்க வேண்டும்."

மேற்கண்டவாறு சட்டத்தரணி என் சத்தியேந்திரா 'வொயர்டயர்' முறையில் நடைபெற்ற நீர்வேலி வங்கி கொலை, கொள்ளை வழக்கு எதிரிகள் மீதான விசாரணையில் தமது தொகுப்புரையில் குறிப்பிட்டார்.

'வொயர்டயர்' முறையில் விசாரணை இக் கொலை கொள்ளை வழக்குக்கு அப்பாற்பட்டதாகவே இடம்பெற்றது. நீர்வேலி வங்கி கொலை, கொள்ளை வழக்கு எதிரிகளிடமிருந்து வாக்குமூலங்கள் பெறப்பட்ட விதம் சரியானதாக இருந்ததா என்பது பற்றி அறிவதே இந்த விசாரணை முறையின் நோக்கமாகும்.

சட்டத்தரணி சத்தியேந்திரா தொடர்ந்து தமது தொகுப்புரையில் கூறியதாவது: "எதிரிகள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த சமயம் வெளியுலகத் தொடர்பற்றவர்கள், நண்பர்களுடன், அவர்களது சட்டத்தரணிகளுக்குகூட அவர்களைச் சந்திக்க அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. பலத்த இராணுவ, பொலிஸ்பந்தோபஸ்து அவர்களுக்கு போடப்பட்டிருந்தது. எதிரிகளை இரகசியமான முறையிலேயே இராணுவ, பொலிஸ் அதிகாரிகள் விசாரித்துவந்தனர்.

இந்த நிலையில் எதிரிகள் தமது வாக்கு மூலத்தை தமது விருப்பப்படி மனந்திறந்து சொல்லியிருப்பார்கள் என்று பூரணமாக ஏற்றுக் கொள்ள முடியாது. ஆகையினால் எதிரிகளிடமிருந்து எந்த வகையில் வாக்கு மூலங்கள் அவர்களது முழுவிருப்புடன் பதியப்பட்டவையா? என்பதையும் நீதிமன்றம் தீர்மானிக்க வேண்டும்" என்றார். (கி)

# காங்கேசன்துறை பகுதியில் குற்றச்செயல்களைத் தடுப்பதில் தீவிரம்!

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறைப் பொலிஸ் பகுதியில் குற்றச்செயல்களைத் தடுப்பதற்கு தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக பதவியேற்றுள்ள இன்ஸ்பெக்டர் திரு கே. ஆர். இராமச்சந்திரன் இதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளார்.

காங்கேசன்துறைப் பொலிஸ் பிரிவில் கிராமங்கள் தோறும் திருடர்கள் அதிகரித்து கிராம மக்களுக்கு கஷ்டமும், நஷ்டமும் ஏற்பட்டுவருவதால் இவ்வாறான திருட்டுப் பேர்வழிகளைக் கண்டுபிடிக்க துரிதநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கிராம ரீதியாக விழிப்புக் குழுக்களை அமைத்து அவற்றின் உதவியுடன் குற்றச் செயல்களை தடுப்பது தொடர்பான நடவடிக்கைகளையும் புதிய பொறுப்பதிகாரி மேற்கொண்டுள்ளார்.

குற்றச்செயல்களை ஒழிப்பதற்கு பொதுமக்களது உதவியையும் பெறுவதற்கு அவர் நடவடிக்கை எடுத்துள்ளார். பொலிஸ் பொதுமக்கள் நட்புறவை வளர்ப்பது அவசியமென அவர் கருத்துவெளியிட்டார்.

காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்தில் விசாரணைகளைத் துரிதப்படுத்தவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. புதிதாக 3 சப்இன்ஸ்பெக்டர்களும், 10 கான்ஸ்டபிள்களும் தற்போது வந்து சேர்ந்துள்ளனர்.

அத்துடன் ஏற்கனவே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பொலிசாரின் வழமையான அலுவல்களும் காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்தில் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வன்செயல் சம்பவங்களை அடுத்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இந்த வழமையான அலுவல்கள் மீண்டும் நடைமுறைக்கு வந்துள்ளன.

மாதாந்தம் நடைபெறும் பரிசோதனை, அணிவகுப்பு ஆகியனவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

# புதிய இடத்திற்கு மயானம்

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறையில் மயானம் தொடர்பாக ஏற்பட்டிருந்த பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டு மயானத்திற்கென புதிய இடம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை ஐயனார் கோவிலடிக்கருகாமையிலகடற்கரையில் அமைந்திருந்த மயானம் காங்கேசன்துறையில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் துறைமுகப் பகுதிக்குள் வருவதால் அதனை இடம் மாற்ற ஆலோசிக்கப்பட்டது.

# புதிய தபால்பெட்டி

(பண்டத்தரிப்பு)

வடலியடைப்பு கலைவாணி வீதியில் அப்பகுதி மக்களின் நலன் கருதி புதிய தபால் பெட்டி ஒன்றை தபாற்திணைக்களம் கடந்த வாரம் நிறுவியுள்ளது.

இப்பகுதி மக்கள் இதுவரை காலமும் கடிதங்களை தபாலில் சேர்ப்பதற்கு நீண்ட தூரத்தில் உள்ள பண்டத்தரிப்பு தபால் நிலையத்திற்கு செல்லவேண்டியுள்ளதென்றும். இவ்விடத்தில் மக்களின் வசதிக்காக தபால் பெட்டியொன்று நிறுவுமாறு வடலியடைப்பு கலைவாணி விளையாட்டுக் கழகம் வடபிராந்திய தபால் அத்தியட்சகரை மகஜர் ஒன்றின் மூலம் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.


யாழ்/பளை மகாவித்தியாலய சாரணர் வளர்ச்சி நிதிக்கான

## சீட்டிழுப்பு முடிவுகள்

1-ம் பரிசு இல: 1186 2-ம் பரிசு இல: 365
3-ம் பரிசு இல: 1111 4-ம் பரிசு இல: 520
5-ம் பரிசு இல: 1456 6-ம் பரிசு இல: 1146

பரிசுக்குரியவர்கள் 15-03-83க்கு முன்னர் பளை மகாவித்தியாலய அதிபரிடம் பரிசுக்குரிய சீட்டுக்களுடன் வந்து பெற்றுக்கொள்ளவும்.

சாரண ஆசிரியர்
சி. மகாலிங்கம்

6209

## அஸாமில் 12 மாநிலச் சட்டமன்ற தொகுதிகளுக்கு மீண்டும் தேர்தல்!

புதுடில்லி, பெப். 16
அஸாம் மாநில சட்டப்பேரவையின் 126 உறுப்பினரின் தெரிவிற்காக கடந்த திங்கள் நடந்த முதற்கட்ட வாக்குப் பதிவின் போது 12 சட்டப் பேரவை உறுப்பினர் தெரிவிற்கான 137 வாக்குப்பதிவு சாவடிகளில் மீண்டும் வாக்குப்பதிவு நடைபெறும். இதற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படுமெனதேர்தல் கமிஷனர் நேற்று இரவு அறிவித்தார்.

137 வாக்குப் பதிவுச்சாவடிகளில் தேர்தல் பகிஷ்கரிப்பு இயக்கத்தினரால் வாக்குப் பெட்டிகள் கடத்திச் செல்லப் பட்டுள்ளமையே மீண்டும் வாக்குப்பதிவு நடைபெறுவதற்குக் காரணம் என்று தேர்தல் கமிஷனர் மேலும் தெரிவித்தார்.

அஸாம் மாநிலத்தில் தேர்தல் நடத்தக்கூடிய வாய்ப்பு தற்போது இல்லாமையால் தேர்தலை ஒத்திபோடுமாறு ஜனதா கட்சியினர் தலைமைத் தேர்தல் கமிஷனரைக் கோரி மகஜர் கொடுத்துள்ளனர். இதேவேளையில் ஆளும் இந்திராகாங்கிரஸ் கட்சி தேர்தலை ஒத்திபோடாது நடத்துமாறு கோரி மகஜர் கொடுத்துள்ளது.

விசுவநாத் தொகுதியில் போட்டியிட்ட இந்திரா காங்கிரஸ் கட்சியின் வேட்பாளரையும் வேறு ஒரு தொகுதியில் போட்டியிடும் வேட்பாளரின் மகனையும் கடத்திச்சென்று கிளர்ச்சியாளரால் கொலை செய்துள்ளனர். தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களும், அவர்களது தேர்தல்பிரசார வேலைகளை நடத்துவோரும், வேட்பாளரின் குடும்பத்தினர், உறவினர், ஆகியோரும் பாதுகாப்புச் சேவையில் உள்ள பொலிஸ் படையினரும் கிளர்ச்சியாளரால் கடந்த திங்கள் முதல் தாக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் துறைகுற்றப் பகுதியினர் தெரிவித்தனர்.

லோக்சபாவுக்கு 12 உறுப்பினர்களைத் தெரிவு செய்ய நடைபெறும் அஸாம் மாநிலத்தேர்தலில் போட்டியிட்ட நான்கு இந்திரா காங்கிரஸ் கட்சி வேட்பாளர்கள் போட்டியின்றி லோக்சபா உறுப்பினர்களாகியுள்ளனர். ஐந்து கட்சிகளின் கூட்டமைப்பான கம்யூனிஸ்ட் டொமினேற் இடதுசாரிக்கட்சி, கம்யூனிஸ்ட் அல்லாத எதிர்க்கட்சிகளும் தேர்தல் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளன. அஸாம் மாணவர் பேரவையும் தேர்தல் பகிஷ்கரிப்பு நடவடிக்கைகள் ஆதரவு திரட்டலில் ஈடுபட்டுள்ளது.

அஸாம் மாநில ஆளுநரின் ஆலோசகர்களான ஆர். சுப்ரமணியம், எஸ். நடராசா ஆகியோர்தற்போது மாநிலத்தில் பாதுகாப்புச்சேவை இறுக்கமாக்கப்பட்டுள்ளதாகவும், தேர்தல் வாக்குப்பதிவினை அடுத்துத் தொடர்ந்து வேட்பாளர்கள் சகலருக்கும் பாதுகாப்பு வழங்கப்படும் என்று இன்று புதன் காலையில் தெரிவித்தனர்.

அஸாமின் கம்ரூப் மாவட்டத்தில் கடந்த ஞாயிறு இந்துக்களுக்கும் வங்காள மொழி பேசும் முஸ்லீம்களுக்கும் இடையே ஏற்பட்டுள்ள வகுப்புக்கலவரம் பற்றி மத்திய அரசினால் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையின் முக்கிய விபரங்கள் வருமாறு: சிறுபிள்ளைகள் உட்பட 15 பேர் படுகொலையுண்டனர். மேலும் பத்துச் சடலங்களைப் பொலிஸார் கண்டெடுத்துள்ளனர். வகுப்புக்கலவரத்தினால் 8 ஆயிரம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். 1000 வீடுகள் முற்றாகத் தீயிட்டுக் கொழுத்தப்பட்டுள்ளன. 200 மண் குடிசைகள் நீர்மூலமாக்கப்பட்டன. இங்கு 12 கிராமங்களில் தேர்தல் முழுமையாகப் பகிஷ்கரிக்கப்பட்டு வருகிறது.

பாதிப்படைந்த குடும்பங்களுக்கு தலா 60 ரூபா நாளொன்றுக்கு வழங்கவும், சிறந்தோர் குடும்பங்களுக்குத் தலா 5000 ரூபா வழங்கவும் மத்திய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. (உ)

## பாலஸ்தீன இயக்கத்துக்கு சவூதி நிதி உதவி

லண்டன், பெப். 16
பாலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கு சவூதி அரேபியா அரசு 2 கோடி 80 லட்சம் டாலர் நிதியை அதிகார பூர்வமாக அன்பளிப்புச்செய்துள்ளது.

1978லிருந்து பாலஸ்தீன இயக்கத்துக்கு எண்ணெய் உற்பத்தி செய்யும் அரபு நாடுகள் ஆண்டுதோறும் 30 கோடி டாலர் நிதி உதவி வழங்கிவருவது குறிப்பிடத்தக்கது.

சவூதி அராபியமன்னர் பாலஸ்தீன விடுதலை இயக்கத்துக்குத் தொடர்ச்சியான ஆதரவு நிதி உதவிகளை வழங்கி வருவதோடு ஏனைய அரபு நாடுகளை அதிகார பூர்வமான நிதிஉதவிகள், ஆதரவுகளை வழங்குமாறு ஊக்குவித்து வருகின்றார். [உ]

## நாகர்கோவில் வன்செயல்கள்

நாகர்கோவில், பெப். 16
தமிழக மாநிலத்தின் நாகர்கோவிலில் ஏற்பட்ட வன்செயல்களை அடக்குவதற்கு மத்திய றிசேர்வ் பொலிஸ்படையும், மாநில பொலிஸ் விசேட பிரிவும் நாகர்கோவிலுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்

கடந்தஞாயிறு நடைபெற்ற அனுமதியற்ற ஊர்வலத்தின் போது, பொலிஸாருக்கும் ஊர் வலத்தினருக்கு மிடையே ஏற்பட்ட கலவரத்தை அடுத்தே இப்பகுதியில் வன்செயல்கள் வெடித்துள்ளன.

தமிழ்நாடு மாநில அரசின் நிதி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், இவ்வன்செயல்களுக்கு 'ஆர். எஸ்' இயக்கத்தினரே காரணமென்றும் இத்தகைய செயல்களுக்கு இடமளிக்கப்போவதில்லை என்றும் கண்டனம் தெரிவித்துள்ளார். (உ)

## தமிழக சட்ட மேலவைக்கான இடைத்தேர்தல்

புதுடில்லி, பெப். 16
தமிழ்நாடு மேலவை மன்றத்தின் உறுப்பினர் ப. உ. சண்முகம் ராஜினாமா செய்தமையினால் புதிய உறுப்பினர் தெரிவுக்கான இடைத் தேர்தல் நடைபெறவுள்ளது.

இவ்விடைத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கலாகும் இறுதிதினம் இம்மாதம் 23ந் திகதி என பாரத மத்திய தேர்தல் கமிஷனர் அறிவித்துள்ளார். [உ]

## ஆப்கான் நிலைமை பற்றி துணைப் பிரதமர் தகவல்

காபூல், பெப். 16,
''ஆப்கான் பொருளாதாரம் சீர்குலைந்து விட்டதாகவும், மக்கள் வாழ்க்கைத்தரம்குறைந்து வருவதாகவும் மேற்கத்திய பத்திரிகைகள் – குறிப்பாக அமெரிக்கப் பத்திரிகைகள் கட்டுக் கதைகளைப் பரப்பி வருகின்றன. இது அப்பட்டமான பொய்'' என்றுதுணைப்பிரதமர் ஜனாப் சலீம் அஹமத் அபலி இங்குவிடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

''ஆப்கான் பொருளாதாரத்தில் விவசாயமே முக்கியஇடம் பெற்றுள்ளது. மக்களில் 80 சத விகிதம் பேர் விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். தேசிய வருமானத்தில் மூன்றில் இரண்டு பங்கும் ஏற்றுமதி வருமானத்தில் முக்கால் பங்கும் விவசாயத்தில் இருந்து கிடைக்கின்றன.

சென்ற ஆண்டில் மொத்த விவசாய உற்பத்தி, புரட்சிக்கு முன் இருந்ததைவிட 12.7 சதவிகிதம் அதிகரித்தது. சென்ற ஆண்டில் மட்டும் 2000 ஹெக்டேர் நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கப்பட்டது. மற்றும் 7000 ஹெக்டேர் நிலத்திற்கு நீர்ப்பாசன வசதி அபிவிருத்தி செய்யப்பட்டது. நிலச் சீர்திருத்தத்தினால் 3 லட்சம் விவசாயக்குடும்பங்களுக்கு நிலம் கிடைத்தது. உரம், விதைகள், விவசாய இயந்திர சாதனங்கள், முதலியவற்றைக் குறைந்த விலையில் விவசாயிகளுக்கு அரசு விற்பனை செய்கிறது. இது தவிர குறைந்த வட்டிக்குக் கடனும்கொடுக்கிறது.

பருத்தி, சர்க்கரை வள்ளி முதலிய விளை பொருள்களின் கொள்முதல் விலையை அரசு உயர்த்தியுள்ளது''

ஆப்கானுக்கு சோஷலிசநாடுகளின் பொருளாதார உதவி குறிப்பாக சோவியத் யூனியனின் பொருளாதார உதவி மிகவும் மதிப்பு வாய்ந்ததாக உள்ளது' என்று அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

பங்களாதேஷ்

## மாணவர் - பொலிஸ் மோதலில் 30 அரசியல் வாதிகள் கைது!

### நகரில் ஊரடங்குச் சட்டம் அமுல்

டாக்கா, பெப். 16
பங்களாதேஷில் இராணுவ ஆட்சியையும், புதிய கல்விக்கொள்கையையும் எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்திய மாணவர்களும் — பொலிஸாரும் மோதிக்கொண்டதில் ஒரு மாணவன் பலியானான்!

4 பத்திரிகையாளரும் 87 மாணவர்களும் படுகாயமடைந்தனர். 50 பொலிஸார் மாணவரின் தாக்குதலால் படுகாயமடைந்ததுடன் பொது மக்களில் 37 பேரும் காயமடைந்தனர்.

கடந்த 14ம் திகதி நடைபெற்ற மாணவர் ஆர்ப்பாட்டத்திலேயே மேற்படி சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

மாணவர் — பொலிஸாரின் மோதலை அடுத்து படுகொலையுண்ட முன்னைநாள் பங்களாதேஷ் ஜனாதிபதி முஜிபுர் ரஹ்மானின் மகன், முன்னைநாள் அமைச்சர் ஒருவர் உட்பட 30 பிரபலமான அரசியல் வாதிகளை இராணுவ ஆட்சியாளர் கைதுசெய்துள்ளனர் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு, கூட்டங்கள் ஊர்வலங்களுக்குத் தடைவிதித்துள்ளதோடு டாக்கா பல்கலைக் கழகம் கல்லூரிகள் முழுமையாக மூடப்பட்டுள்ளன.

டாக்கா பல்கலைக்கழக மாணவர்கள், டாக்கா நகரின் கல்லூரி மாணவர்கள் இணைந்து நடத்திய இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் முதலில் பொலிஸார் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வெடித்து மாணவர்களைக் கலைக்க முற்பட்டதாகவும், மாணவர்கள் கற்களைவீசி பொலிஸாரைத் திருப்பித்தாக்கியதை அடுத்தே துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் இதனையடுத்தே பெரும் மோதல்கள் ஏற்பட்டதாகவும் தெரியவருகிறது.

வன்செயல்கள் மேலும் பரவியதை அடுத்து டாக்கா நகரில் இராணுவத் துருப்புக்கள் தற்போது நிலைகொண்டுள்ளன. [உ]

## 11 அமைச்சர்கள் ராஜினாமா!

புதுடில்லி, பெப். 16
பீகார் மாநில அரசின் 37 அமைச்சர்களைக் கொண்ட அமைச்சரவையிலிருந்து 11 அமைச்சர்கள் பதவிகளை ராஜினாமாச் செய்துள்ளனர்.

ராஜினாமா செய்துள்ள அமைச்சர்களில் 6 சிரேஷ்ட அமைச்சர்கள், 4 உதவியமைச்சர்கள் ஒரு துணையமைச்சர் அடங்குகின்றனர் இவர்களின் ராஜினாமா கடிதங்களை பீகார் மாநில முதலமைச்சரின்ஆலோசனைப்படி மாநில ஆளுநர் ஏற்றுக் கொண்டதாக அறிவித்தார். (உ)

## றீகனைக் கொல்லமுயன்றவர் தற்கொலை செய்ய முயற்சி

வாஷிங்டன், பெப். 16
அமெரிக்க ஜனாதிபதியை சுட்டுக் கொலைசெய்ய முயன்ற ஜோன்ஹிங்கிலி மனநோயாளர் ஆஸ்பத்திரியில் பாதுகாப்பில் வைக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகிறார் இவர் தற்கொலை செய்ய முயன்று துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியுள்ளார்.

கடந்த 81ம் ஆண்டு மார்ச் 30ந் திகதி வாஷிங்டன் ஹில்டன் ஹோட்டலின் அருகில் வைத்து ஜனாதிபதி றெனல்ட் றீகனையும், வேறுமூவரையும் சுட்டுக்கொலை செய்ய முயன்றவர் ஜோன்ஹின்கிலி.

இதனையடுத்து இவர் வாஷிங்டன் மனநோயாளர் ஆஸ்பத்திரியில் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்து வந்தார். கடந்த 13ந் திகதி ஞாயிறு அன்றுதுப்பாக்கியால் தம்மை சுட்டுத் தற்கொலை செய்ய முயன்றபொழுது படுகாயமடைந்தார். தற்போது ஆபத்தான நிலைமையைக் கடந்துள்ளதாகவும், சிகிச்சைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [உ]

## "15,258 ஈரானியர்களை ஈராக் கொன்றுள்ளது!"

பாக்தாத், பெப். 16
29 மாதகால தொடர்ச்சியான வளைகுடா போரில் கடந்த திங்கள் வரை 15,258 ஈரானியப் படைவீரர்களைக்கொன்றுள்ளதாக ஈராக் இராணுவ உயர்பீடம் நேற்றுத் தெரிவித்தது.

ஈராக் இராணுவ உயர்பீடத்தின் அறிக்கையில்: ஈரானியப் படைகள் ஈராக்கின் தென்பகுதி நகரமான பாஷ்ராவிலும், எல்லைப்புற நகர்களான மண்டலி, மெஹ்பலிஆகியனவில் மக்களின் குடியிருப்புகளில் தாக்குதல்களை மேற்கொண்டு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கிறது. அதே வேளையில் ஈராக் படைகளில் மாண்டவர்களின் தொகை விபரங்களைக் குறிப்பிடவில்லை.

கடந்த சனிக்கிழமை ஈராக் பாக்தாத் நகரவீதிகளில், தான் கைப்பற்றியுள்ள ஈரானியப் போர்க்களக் கைதிகளின் ஊர்வலத்தையும் நடத்தியுள்ளது.

தமிழக ஆலயங்கள்

## பரம்பரை நிர்வாகத்துக்கு முற்றுப்புள்ளி வரும்

சென்னை, பெப். 16
தமிழ்நாட்டிலுள்ள கோவில்களின் பரிபாலனத்தைநடத்தி வரும் பரம்பரை அறங்காவல் பதவிகளை நீக்கும் அறங்காவல் சட்டத்திற்கான மசோதா தமிழ்நாடு மாநில சட்டமன்றத்தில் தாக்கலாகவுள்ளது என்று தமிழ்நாடு மாநில அறங்காவல்துறை, செய்தித் தகவல்துறை அமைச்சர் ஆர்.

(7-ம் பக்கம் பார்க்க)

## மணிவாக்கு

நல்லவனென்று வேஷம் போடுதல், மிகமிகக் கணக்குப் பார்த்தல், அல்லது மிகமிக வாதம்பண்ணு தல்—இந்தக் குணமுடைய மனம் கொண்டு கடவுளை அறிந்துணரமுடியாது. உள்ளொன்று புறம்பொன்று இல்லாதார்க்கு இறைவன் வெகு அண்மையிலே உள்ளான்.

—ஸ்ரீ ராமகிருஷ்ணர்

# நமது நோக்கு

## அபிவிருத்தியும் அரசியல் உரிமைகளும்

அபிவிருத்தி, சமத்துவம் மனித அடிப்படை உரிமைகள்—இவை பற்றி மேற்கிலும் கிழக்கிலும் நடைபெறும் விவாதங்கள் அனந்தம்!

அபிவிருத்தியடைந்த நாடுகளில் இவ்வித விவாதங்கள் பலனளிக்கலாம். காரணம்; அந்நாடுகளின் பொதுமக்கள் வறுமைநிலையிலிருந்து நீங்கி நாட்டு நலனில் அக்கறை காட்டும் ஓ உல்புடையவர்கள்.

எங்கள் நாட்டைப் போன்ற வறிய நாடுகள் பொதுஜன வறுமையென்ற நெடுங்கால நோயால் பீடித்திருக்கின்றன. மூன்றும் உலகமென்றும் அணிசேரா நாடுகள் என்றும் நாம் இவற்றை வர்ணிக்கும் போது, பொதுஜனவறுமை காரணமாக, உலகின் இரு அணிகளின் முதலாளித்துவ, கம்மியூனிஸ்ட்- தாக்கத்துக்கு அரசியல், பொருளாதார தலையீடுகளுக்கு ஆளாகின்றோம்.

அணிசேராநாடுகளென்ற தூயநிலையில், அந்த லட்சியத்தில் இறுக நிற்க எத்தனித்த போதும் இத்தாக்கத்திலிருந்து தப்பியிருப்பது அரிது; இருப்பினும் இதனைப் பாதுகாக்க முயல வேண்டும்.

எங்கள் நாடு போன்ற பல அணிசேரா நாடுகளை அவதானித்தால், ஒரு மிகக் கசப்பான உண்மை வெளியாகும்.

நாம் முதலாளித்துவ அமெரிக்காவும் அதன் மேற்கு நாட்டுச் சைனியங்களையும் ஆதரித்தாலென்ன; அல்லது சோவியத் ரஷ்யாவும் அதன் கிழக்கு ஐரோப்பிய கூட்டாளிகளையும ஆதரித்தாலென்ன எங்கள் நாட்டின் அபிவிருத்தியும், மக்கள் அரசியல் உரிமைகளும் பலம்பெறவோ பாதுகாக்கப்படவோ முடியாதென்பதே

ஏனென்று கேட்டால் இந்த இரு வல்லரசு நாடுகள் ஒருவித ஏகாதிபத்திய ஆட்சி முறையையே நாடுகின்றன; தங்கள் கட்டுப்பாட்டுக்குள் இயங்கவைக்க முனைகின்றன.

எங்கள் நாட்டுக்கு கிடைக்கும் உதவியெல்லாம், இங்கு அரசாட்சி நடத்தும் பிரமுகர் கூட்டத்துக்கே கிடைக்கும்; மக்கள் நலனுக்குச் சுவறுமென்று சொல்ல முடியாது.

எமது நாட்டின் ஜனதிபதியும் பிரதமமந்திரியும், தங்கள் ஆட்சிக்கு தங்கள் கட்சிக்கு எதிராக வாக்களித்த லட்சக்கணக்கான மக்களின் பொது நலத்தைக் கவனிக்கும் பொறுப்புபற்றி மிகச் சிரத்தையுடன் குறிப்பிட்டிருக்கின்றனர்.

குறிப்பாக பிரதமர் பிரேமதாசா வசதியற்றவர்களின் நிலைமையைக் கணிசமான அளவிற்கு உயர்த்தாவிட்டால் தேசிய அபிவிருத்தியும் ஜனநாயகமும் கருத்தற்ற பதங்களே என்று பாராளுமன்றத்திலும், வெளியிலும் பல தடவை வற்புறுத்தியிருக்கிறார். பிரதமரின் பொதுநலப்பணி வெறும் வாய்ப்பந்தல் அல்ல என்பதை அவருடைய அரசியல் எதிரிகளே ஒப்புக்கொள்வார்கள்

இருப்பினும் நாம் குறிப்பிடும் விடயம் இந்த நோக்கத்துக்கு அப்பாற்பட்டது; உண்மையில் எங்களைப் போன்ற வறிய நாடுகள் ஆட்சியில் ஆதிக்கம் பெற்றவர்கள், செல்வத்தாலும், அதிகாரத்தாலும் — ஏன் தொழில் மேம்பாட்டாலும் செல்வாக்குப் பெற்ற பிரமுகர்களே!

ஒரு சில செல்வக் குடும்பங்களே நாட்டின் பொருளாதாரத்தை நிர்ணயிக்கின்றனவென்ற குற்றச்சாட்டைக் காலஞ் சென்ற டாக்டர் என்.எம் பெரேரா அடிக்கடி சொல்லியதுண்டு.

அது எவ்வாறாயினும், அபிவிருத்திக்கென்று நாம் பெறக்கூடிய உதவியெல்லாம், பொதுஜன உயர்ச்சிக்குப் பயன்பட வேண்டுமாயின் அவர்கள் தம் அரசியல் உரிமை, அடிப்படை உரிமை பற்றி விழிப்புடையவர்களாக இருக்க வேண்டும்.

பசிவந்திடப் பத்தும் பறந்துபோம் என்பதனால், பசித்தவனில் நம்பிக்கை வைக்கலாகாது.

அடிப்படை உரிமைபற்றியும் அரசியல் உரிமை பற்றியும் அக்கறை காட்டுவதற்கு அடிப்படை தேவைகள் பூர்த்தியாகவேண்டுமே!

இதனை ஆதிபாரமாகக் கொண்டு மக்கள் அபிவிருத்தி என்னும் மாபெரும் திட்டங்கள் இன்று இங்கும், இன்னும் பல வறிய மூன்றும் உலக நாடுகளிலும் மிக வேகமாக செயற்படுகின்றன.

இதில் சிக்கலானவிடயமே மக்கள் அபிவிருத்திக்கும், அவர்களின் அடிப்படை உரிமைகளுக்கும் உண்டான முக்கிய தொடர்பு.

நாட்டுக்கு அவசியமான வெளிநாட்டு, சர்வதேச நிறுவன உதவிகளெல்லாம். நாட்டின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தும் அதே வேளையில் மக்கள் உரிமைகள் பேணப்படும் அளவிற்கு, ஆட்சி மக்கள் ஆட்சியாக மிளிரவேண்டும். எனவே நாட்டின் ஒரு முக்கிய பகுதி வறண்ட பூமியாக விருப்பது எங்ஙனம்?

இந்த நிலையில் தான் தமிழ் மக்கள் உரிமைகளும், தமிழ்ப் பிரதேச அபிவிருத்தியும் கணிக்கப்பட வேண்டியது.

பிரமுகர் ஆட்சியில், செல்வர் ஆட்சியில் செல்வர்கள் தங்கள் ஆடம்பர சுகங்களையும் போகங்களையும் ஒறுத்து பொது மக்கள் பொருளாதார நிலையை உயர்த்த முன்வருவார்களா? முக்கிய கேள்வி இது.

இது நடைபெற்றாலொழிய நாட்டில் மக்கள் ஆட்சி உலுப்பெறாது. பொதுமக்களின் பொருளாதார நிலை எவ்வளவிற்குச் சீர்படுத்தப்படுகின்றதோ, அவ்வளவிற்கு அவர்கள் அரசியல் உணர்வு அதிகரிக்குமென அறிக.

அபிவிருத்திக்கும் அரசியல் உரிமைக்கும் சமமான ஏற்றம் கண்டாலொழிய, அரசியல் அறைகள் வடக்கிலும் கிழக்கிலும் தெற்கிலும் எவ்வித பலனுமடையமாட்டார்கள். வெறும் அபிவிருத்தி பிரமுகர் ஆட்சியையே உறுதிப் படுத்தும்.

குறிப்பாக அரசியல் உரிமைகள் இழந்து தவிக்கும் தமிழ் மக்கள் அபிவிருத்திக்கென்று ஆரவாரம் செய்தல். அடிப்படை உரிமைகள் மறுக்கப் படுவதற்கு மறைமுகமாக ஆதரவளிப்பதாகும்.

## இந்த வித்தியாலயத்தைத் தரம் உயர்த்தித் தருக!

'ஈழநாடு' பத்திரிகையில் 6-2-83 ஞாயிற்றுக்கிழமை 'நகர்ப்புறக் கல்லூரி வசதிகள் கிராமங்களிலும் ஏற்படவேண்டும்' என்ற தலையங்கத்துடன் வெளிவந்த செய்தியைப்படித்தோம். நகர்ப்புறக் கல்லூரி வசதிகள் நாட்டுப்புறங்களில் அமையவேண்டும் என்பதை நாம் மனப்பூர்வமாக வரவேற்கிறோம். ஆனால் ஏட்டுச்சுரைக்காய் கறிக்குஉதவாது என்பது போல் பேச்சளவில் நாம் நின்றுவிடாது செயலில் நாம் சொல்வதை செய்துகாட்டவேண்டும் பூநகரியிலிருந்து சுமார் இருபதுமைல் தூரத்திலுள்ள கிராஞ்சி வலைப்பாடு பொன்னாவெளி ஆகிய கிராமப்புறப் பாடசாலைகளில் முதலாம் வகுப்புத் தொடக்கம் ஐந்தாம் வகுப்புவரை கல்விபயிலும் ஏழை மாணவர்கள் ஆறும் வகுப்பு முதல் உயர்கல்வி கற்க வேரவில் பாடசாலையை நாடுகிறார்கள். ஆனால் அப்பாடசாலையில் நிரந்தர அதிபரோ பட்டதாரி ஆசிரியர்களோ விசேட பயிற்சிபெற்ற ஆசிரியர்களோ எவரும் இல்லை. இப்பாடசாலைக்கு மாற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியர் ஒருவரினதும் விசேட பயிற்சிபெற்ற ஆசிரியர் ஒருவரினதும் இடமாற்றம் அரசியல் தலையீட்டினால் ரத்துச்செய்யப்பட்டது. வட்டக்கச்சியில் நல்ல கல்வி வசதி இல்லாவிடில் சமீபத்தில் உள்ள கிளிநொச்சிக்கு சென்று மாணவர்கள் கல்விபெற நல்ல போக்கு வரத்து வசதிகளும் வட்டக்கச்சி மக்களுக்கு உண்டு. ஆனால் கிராஞ்சி, வேரவில் வலைப்பாடு பொன்னாவெளி மக்கள் பூநகரிக்குவந்து நல்ல கல்விவசதிபெற நல்ல பஸ்சேவையும் இல்லை. தூரமும்கூட. கிளிநொச்சியைப் போன்ற உயர்கல்வி வசதிகள் பூநகரியிலும்இல்லை ஆனபடியால் கிராஞ்சி வேரவில் வலைப்பாடு பொன்னாவெளி பாலாவியில் வசிக்கும் பின்தங்கிய மக்களான விவசாயிகள், சீவல் தொழிலாளிகள் கடல் தொழிலாளிகளின் குழந்தைகள் உயர்கல்வி கற்று உத்தியோக வாய்ப்பும் பல்கலைக் கழகப் படிப்பு வசதியும்பெற யாழ்ப்பாணம் கல்விப்பணிப்பாளர் அவர்கள் வேரவில் தமிழ் வித்தியாலயத்தின் தரத்தை உயர்த்தி நிரந்தர அதிபர் பட்டதாரி ஆசிரியர் விசேட பயிற்சிபெற்ற ஆசிரியர்களை நியமிப்பார் என எதிர்பார்க்கிறோம்.

செ. முத்துலிங்கம்,
க. திருநாவுக்கரசு,
வீ. சரவணபவான்,
க. பரமானந்தம்,
ஆ. க. சுப்பிரமணியம்,
கிராஞ்சி, சிவபுரம்,
[பூநகரி வழி]

தவக்கால நற்சிந்தனை (2)



## என் அன்றாட வாழ்வில் யேசுவை பின்செல்வோம்

பாவத்தில் இருந்து உலகிற்கு மீட்பு கொடுக்க சிலுவையின் வழி யேசு போராடினார். போராட்டத்தின் உச்சக்கட்டத்தில் தம் உயிரையும் நமக்காக சர்ப்பணித்தார். 'என்னை பின் செல்ல விரும்புகிறவன், தன்னையே மறுத்து தன் சிலுவையை நாள்தோறும் சுமந்து கொண்டு என்னை பின்செல்லட்டும்' என்கிறார் யேசு. எமது அன்றாட வாழ்வில் நாம் எத்தனையோ இன்பதுன்பங்களை அனுபவிக்கிறோம் இவற்றின் மத்தியிலும் எமது அன்றாட வாழ்வில் யேசுவை பின்செல்வோம். எமது உயிரையும் அவருக்காக கொடுக்க துணிந்து நிற்போம். நாம் உலகம் எல்லாவற்றையும் நமதாக்கிக் கொண்டாலும் நமது ஆன்மாவை இழந்துவிட்டால் பயன் என்ன?

அருட்செல்வன் .ம.ரூபன்

## மகாராஜபுரம் சந்தானம் யாழ்.வருகிறார்

(யாழ்ப்பாணம்)

பிரபல கர்நாடக இசைக் கலைஞர் மகாராஜபுரம் சந்தானம் இலங்கை வரவுள்ளார்.

யாழ்ப்பாணம் ராமநாதன் இசைக்கல்லூரி ஆரம்பிக்கப் பட்டபோது அதன் முதலாவது அதிபராகக் கடமையாற்றி அநேக மாணவ, மாணவியரை தரமான கலைஞர்களாக உருவாக்கிய பெருமை இவருக்கு உண்டு. அந் நாட்களில் (1961-1964) இலங்கையின் பல பாகங்களிலும் இசைச் கச்சேரிகள் நடாத்தி கர்நாடக இசைக்கு புத்துயிர் அளித்து வந்தார்.

தற்போது இந்தியாவின் கர்நாடக வித்வான்களில் ஒருவராக விளங்கும் இவர் சிங்கப்பூர், மலேசியா, கனடா, அமெரிக்கா நாடுகளிலும் கச்சேரிகள் நடாத்தி சர்வதேசப் புகழீட்டியுள்ளார்.

பெப்ரவரி 26ம் திகதி அளவில் வருகைதரவுள்ள இவரது நிகழ்ச்சிகளுக்கான ஏற்பாடுகளை அவரது சிஷ்யர்களில் ஒருவரான திரு. ஏ.கே கருணாகரன் கவனித்து வருகிறார்,

## வரட்சி தாண்டவம்!

சென்னை, பெப். 16

தமிழகத்தில் நிலவும் வரட்சியால் தமிழகத்தின் உணவுக் களஞ்சியமாகத் திகழும் தஞ்சை மாவட்டம், மற்றும் தென்னாற்காடு மாவட்டம் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

தென்னாற்காடு மாவட்டத்தில் காவிரிநீர் இல்லாததால் கொள்ளிடம் நதி வரண்டு மணல் பாதையாகியுள்ளது. இதன் எதிரொலியாக 7 லட்சம் விவசாயிகள் தொழிலில்லாது பாதிப்படைந்துள்ளனர் 2325 கிராமங்களில் பயிர்கள் முற்றாக அழிந்துவிட்டன. மக்கள் குடிநீர் கூட பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இம்மாவட்டம் முழுவதுமே வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ளது.

வரட்சி பற்றி கருத்துத்தெரிவித்த தென்னாற்காடுமாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி சந்திரலேகா, வரட்சி நிவாரணத்துக்கு 555 லட்சம் ரூபாதேவையென்றும் இதில் தற்போது 95 லட்சம் ரூபா மட்டும் தமிழக மாநில அரசு ஒதுக்கியுள்ளது என்றும் தெரிவித்தார். (உ)

# மக்கள் கருத்து

## இந்த வாகன நெருக்கடியைத் தீர்க்கவழி

யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்திருக்கும் தேசிய சேமிப்பு வங்கிக்கு முன்பாக தினசரி வாகன நெருக்கடி போக்குவரத்திற்கு மிகவும் இடையூறாக உள்ளது. காரணம் மேற்படி வங்கிக்கு வரும் வாகனங்கள் நிறுத்துவதற்கு இடம் ஒதுக்கப்படாமையினால் வங்கிக்கு முன்பாக வீதியில் நிறுத்தப்படுவதேயாகும். வங்கியும் வீதியோடு அமைந்திருப்பதனால் இஃது தவிர்க்க முடியாததாகவுள்ளது. இந்நிலையில் வங்கிக்கு மிக அண்மித்தாற்போல் பஸ்தரிப்பு இடமும் அமைக்கப் பட்டுள்ளது. மேற்படி வீதியால் சேவையாற்றும் போக்குவரத்துச்சபை தனியார் பஸ் வண்டிகள் அந்த பஸ்தரிப்பு இடத்தில் நிறுத்தப்படும்போது வாகன நெருக்கடி மிகவும் அதிகரித்து போக்குவரத்து சில நிமிடநேரம் முற்றாகவே தடைப்பட்டு விடுகிறது. இதனால் பாதசாரிகளும் கூட மிகவும் சிரமப்படவேண்டியுள்ளது.

ஆதலால்குறிப்பிட்ட இடத்தில் அமைந்துள்ள பஸ்தரிப்பு நிலைத்தை அப்புறப்படுத்தி சற்றுதள்ளி பிறிதொரு இடத்தில் அமைப்பதற்கு பொலிசாரும் வடபிராந்திய போக்குவரத்துச்சபையினரும் உடன் நடவடிக்கை எடுப்பின் இட நெருக்கடி நீங்குதல் மூலம் விபத்துக்களையும் தவிர்த்துக் கொள்ளலாம்.

தி. செல்வம்
விதானையார் வீதி,
சுண்டிக்குளி.

## சீனு பற்றிய அடிகளாரின் கருத்துரை

தங்கள் பத்திரிகையில் (10-2-83) தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் சீனப் பயண அனுபவ உரையைப் படித்தேன். அத்துடன் பொன்னையும் துலக்கினாலே துலங்கும் என்பதற்கமைய அடிகளாரின் பேச்சை துலக்கிய ஆசிரிய தலையங்கம் ஒருபடி மேலே நிற்கின்றது. அடிகளாரின் நேரடி அனுபவம் சீனாவைப் பார்ப்பதற்கு எமக்கு ஒரு கண்ணை வழங்குகின்றதென்றால் ஆசிரியரின் உய்த்துணர்ந்தெழுதியதலையங்கம் எமக்கு இன்னொரு கண்ணையும் சிந்தனையையும் வழங்குகின்றது என்பதில் சந்தேகமில்லை.

தார்மீக சமுதாயம் பற்றி உரத்துப் பேசுபவர்கள் நமது நாட்டில் மட்டுமன்றி இந்தியாவிலும் நிறைய உள்ளனர். ஆனால் குன்றக்குடி அடிகளார் சீனாவில் தான் உண்மையான தார்மீக சமுதாயத்தை கண்டு வந்துள்ளார். சோஷலிச அமைப்பின் கீழ் அங்கு மக்களின் லௌதீக ஆன்மீக வாழ்க்கை சிறப்பாக அமைந்துள்ளது. மாபெரும் தலைவர் மாவோதான் இதன் சிற்பி. அங்கு மதத்தை நம்புவதற்கும் நம்பாமல் விடுவதற்குச் சுதந்திரம் உண்டு. எந்த விதமான மத, இன, மொழி, சாதி கலவரங்களும் கிடையாது.

அடிகளாரின் அனுபவத்தை ஓரளவு தந்ததுடன் தனது எண்ணத்தையும் வெளியிட்ட ஈழநாடுவுக்கு நன்றி கூறும் அதேவேளையில் குன்றக்குடி அடிகளாரின் முழுப்பேச்சையும் வெளியிட்டால் மிகவும் பயன் அளிக்கும்.

பி. எஸ். சுப்பிரமணியம்
ஸ்ராலி வீதி.

### சண்டிலிப்பாயில்

## போத்தலில் கள் அடைக்கும் தொழிற்சாலை

(மாவிட்டபுரம்)

''வலி தென்மேற்கு தெற்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தின் ஆதரவில் சண்டிலிப்பாயில் போத்தலில் கள் அடைக்கும் தொழிற்சாலையொன்று விரைவில் ஆரம்பிக்கப்பட இருக்கிறது. இத்தொழிற்சாலை மூலம் வருடாவருடம் விலை ஊறும் 5000 போத்தலுக்கு மேற்பட்டகளின் பயன்படுத்த வசதி ஏற்படும். அத்துடன் தொழிலாளர்களும் பெருந் தொகையான கள்ளை இறக்கி பெருந்தொகையான வருமானத்தை பெறமுடியும்.''

இவ்வாறு வலி தென்மேற்கு தெங்குபனம்பொருள் உற்பத்தி விற்பனவுக்கூட்டுறவுச் சங்கத்தலைவர் திரு. வே. செபஸ்தியாம்பிள்ளை சங்கப் பணிமனையில் இடம்பெற்ற கருத்தரங்கொன்றில் பேசுகையில் கூறினார்.

சங்க உத்தியோகத்தர்கள் நிர்வாக உறுப்பினர்கள் அபிவிருத்திக்குழு உறுப்பினர்கள், கூட்டுறவு உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்ட இக்கருத்தரங்கில் அவர்மேலும் பேசுகையில் கூறியதாவது:

மூன்று தேர்தல் தொகுதிகளை உள்ளடக்கியுள்ள எமது சங்கம் 1000க்கு மேற்பட்ட அங்கத்தவர்களுடன்சிறப்பாக இயங்கிவருகிறது. அரசாங்கத்திற்கு விற்பனைவரியாக 1½ லட்சம் ரூபா செலுத்தப்பட்டுள்ளது. அங்கத்தவர் கட்டாய சேமிப்பாக 72 ஆயிரம் ரூபா, சேமிக்கப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் 1000 ரூபாவாகவிருந்த சங்கத்தின் வியாபாரம் இன்று 5000 ரூபாவுக்கு உயர்ந்துள்ளது. அரசாங்கத்தின் வி. ஓ. திட்டம் வரிகுறைப்பு, குடியேற்றத்திட்டம் கடன்வசதித்திட்டம் என்பன போன்ற உதவிகள் எமக்கு பெரும் வரப்பிரசாதமாக உள்ளது அரசாங்கத்திற்கு நாம் நன்றி தெரிவிக்க கடமைப்பட்டுள்ளோம் என்றார்.

மற்றும் உபதலைவர் திரு. சி. சுந்தரசாமி, பொதுமுகாமையாளர் திரு. க. சந்திரராஜா கூட்டுறவு பரிசோதகர் திரு. அந்தோனிப்பிள்ளை உட்பட பலர் பேசினர்.

சங்க அபிவிருத்தி தொடர்பான திட்டங்களும் ஆராயப்பட்டன.

## “இல்லாதஒன்றைக் கற்பனை செய்து எழுதக்கூடாது”

(மாவிட்டபுரம்)

''நவீன இலக்கியம் என்று கூறி இல்லாத ஒன்றைக் கற்பனைசெய்து எழுதுவது கூடாது சமுதாயத்தில் நடப்பவற்றை எழுதவேண்டும். இவ்வாறான படைப்புகளே மக்களிடையே தாக்கத்தை ஏற்படுத்தமுடியும்''

இவ்வாறு வீமன்காமம் மகாவித்தியாலயத்தில் இடம் பெற்ற காங்கேசன்துறைத் தொகுதி கலைஇலக்கிய ஆர்வலர் ஒன்றியத்தின் 3வது சந்திப்பின்போது 'மனித சொரூபங்கள்' சிறுகதைத் தொகுதி ஆசிரியர் திருமதி கோகிலா மகேந்திரன் பேசுகையில் கூறினார்.

மேற்படி சிறுகதைத்தொகுதி இச்சந்திப்பில்அறிமுகம்செய்து வைக்கப்பட்டது.

வீமன்காமம் மகாவித்தியாலய அதிபர் திருமதி பி. சச்சிதானந்தன் தலைமையில் இச் சந்திப்பு நடந்தது.

சிறுகதைத் தொகுதியை அறிமுகம் செய்துவைத்துப் பேசிய ஆசிரியர் திரு. க. வை. தனேஸ்வரன் கூறியதாவது:

இலக்கிய வடிவத்தில் சிறுகதைகளைத் தொகுத்து இச் சிறுகதைத் தொகுதி வெளியிடப்பட்டுள்ளது. இச்சிறுகதைகள் மூலம் தெளிவான உணர்வை மக்களிடையே வளர்க்கமுடியுமென எதிர்பார்க்கலாம்'' என்றார்.

வீமன்காமம் மகாவித்தியாலய அதிபர் திருமதி பி. சச்சிதானந்தம் பேசுகையில் கூறியதாவது:

பண்டைய நூல்கள், இலக்கியங்கள் போன்றவற்றை இன்றும் நாம் கடைப்பிடிக்காமல் நாட்டு முன்னேற்றத்தையும், சமுதாயமாற்றங்களையும் கவனத்தில்கொண்டு புதிய ஆக்கங்களை உருவாக்கி அவற்றின் வழியில் மக்களை வழிநடத்த வேண்டும். இளஞ்சந்ததியினர் மத்தியில் ஆற்றலை வளர்த்து சிறந்த படைப்பாளிகளை உருவாக்கவேண்டும்'' என்றார்.

அடுத்து யாழ். பல்கலைக்கழக உதவி விரிவுரையாளர் திரு. என். சண்முகலிங்கம் ''ஈழத்து தமிழ் இலக்கிய போக்கும், பத்திரிகைகளின் பங்களிப்பும்'' என்னும் விடயம்பற்றி உரையாற்றினார்.

அதுதொடர்பாக கலந்துரையாடலும் இடம்பெற்றது.

ஒன்றியத்தைச்சேர்ந்த திரு. வை. நாகராஜன், திரு. ஏ. ரி. பொன்னுத்துரை ஆகியோர் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தனர்.

### மத்திய அரசு ஏற்றது

புதுடில்லி, பெப், 16

தமிழ்நாடு மாநில அரசின் தானியக் கோரிக்கையை மத்திய யூனியன் அரசு ஏற்று பரிசிலனை செய்வதற்கு இணக்கம் தெரிவித்துள்ளது.

நேற்று செவ்வாய்க்கிழமை புதுடில்லியில் தமிழக முதலமைச்சர் எம். ஜி ராமச்சந்திரன் மத்தியயூனியன் அமைச்சரைச் சந்தித்தபோதே மேற்படி தகவலை மத்தியயூனியன் விவசாய அமைச்சர்முதலமைச்சரிடம் தெரிவித்தார்.

தமிழ்நாடு மாநில அரசு வரட்சியால் ஏற்பட்ட உணவு நிலைமையைச் சமாளிக்க மத்திய யூனியன் அரசிடம் தானியம் வழங்குமாறு கோரியதும் மத்திய அரசு தமிழகத்தின் தானியப்பங்கீட்டில் புறக்கணிப்பு செய்ததாக குற்றம் சாட்டி முதலமைச்சர் எம். ஜி. ராமச்சந்திரன் உண்ணாவிரதம் மேற்கொண்டமையும் மத்திய அரசு முதலமைச்சரை பேச்சுக்கு அழைத்தாயும் குறிப்பிடத்தக்கதாகும். [உ]

# ‘ஜெட்’டைத் தொடரும் வெண்புகை போல

# உபாலி விமானம் பற்றிய மர்மமும் தொடர்கிறது...!

உபாலிவிஜவர்த்தனவின் 'லீயர்ஜெட்' விமானம்தொலைந்தது பற்றியே மூலை முடுக்கெல்லாம் இப்பொழுது பேசப்படுகிறது.

ஆனால் அந்த 'ஜெட்' விமானம் புகைத்துச்செல்லும்நீண்ட வெண்புகைபோல அதன் மறைவையடுத்து தொடர்ந்து கொண்டிருக்கும் தகவல்கள் நெஞ்சைநெகிழவைக்கின்றன! அதிர்ச்சியை உண்டுபண்ணுகின்றன! ஆர்வத்தை தூண்டுகின்றன!

### பெருமைதேடித் தந்தவர்

காப்டன் நொயல் ஆனந்தப்பா இவரே அந்த லீயர் ஜெட்டின் பிரதம விமானி!

''இலங்கை விமானப்படைக்கு பெருமை சேர்த்த விமானிகளின் முன்னணியில் திகழ்ந்தவர்! விமானசாகஸங்களை நிகழ்த்திக்காட்டுவதற்கு புறமுதுகு காட்டாதவர்! விமானங்களை முரட்டுத்தனமாகச் செலுத்துவதில் அலாதியான பிரியம் மிக்கவர்!

எனவே அந்த 'லீயர்ஜெட்'டை ஓட்டுவது ஒரு சிறுபிள்ளை விளையாட்டாகவே அவருக்கு இருந்திருக்கும்'' என்கிறார் இலங்கை விமானப்படையின் அடுத்ததளபதி கொமாண்டர் பெர்ணாண்டோ.

### அனுதைகள்

உப விமானி சிட்ணி சொய்ஸாவின் கதை நெஞ்சைநெகிழவைப்பது! இவருக்கு மூன்று பிள்ளைகள். இருவர் பத்துவயதான இரட்டையர். மூன்றுமவர் 7 வயதுப்பாலகன் இரத்மலானையே இவர்களது வசிப்பிடம்.

தமது தந்தைக்கு நேர்ந்த கதியால் துவண்டு கொண்டிருக்கிறார்கள் இவர்கள்; தாம் வாசித்தமர்மக்கதைகளில் போன்று 'அடுத்து என்ன? அடுத்து என்ன?' என்றபடி தந்தைபற்றி அறியும் துடிப்புடன் வீட்டின் ஒவ்வொரு அறையாக ஓடித்திரிகிறார்களாம்!

இவர்கள்மீது பரிதாபம் படும்படியான இச்சம்பவத்தை யொத்த பெரும் சம்பவம் ஒன்றுமிருக்கிறது. இந்த சிறுசுகள் கடந்த ஆண்டு ஜூனில் தமது தாயாரை விபத்தொன்றில் பறிகொடுத்தவர்கள் என்பதே அது!

தந்தையார் சொய்ஸா தற்போது மாயமாய்மறைந்துள்ள 'ஜெட்டை வாங்க அதன் கம்பனியுடன் பேரம்பேசும் பொருட்டு வெளிநாடு சென்றிருந்தார். அப்போது தாயார் லுக்மி (வயது29) இரத்மலானையில் வீதிவிபத்தொன்றில் ஸ்தலத்திலேயே உலியானார்

இந்த இழப்பை தந்தையாரின் அரவணைப்பில் ஈடுசெய்த அந்த மூன்று இளசுகளும் இன்று அந்த அரவணைப்பை தொடர்ந்தும் பெறதுடியாய்த் துடிக்கின்றன!

''ஒரு பைலட்! அவர் வாழ்க்கை அபாயமானது!'' என்று நாம் பேசிக்கொள்வது பற்றி அந்த சிறுசுகளுக்கு என்ன தெரியும்?

### உபாலி

உபாலிவிஜேவர்த்தன! 3000 டாலர்களுடன் உணக்கில டங்கா டாலர்களைச் சம்பாதித்தவர்! ஜனாதிபதிக்கும், திருமதி சிறிமாவோ அம்மையாருக்கும் மிக நெருங்கியவர்! இரு துருவங்களான இவர்களுடன் பகைத்துக் கொள்ளாது தமதுகாரியத்தை கொண்டு சென்றதிலிருந்தே இவர் திறமை புலனாகிறது;

### பல்கேரிய விமானி

''கிழக்கிலங்கையை படுத்துள்ள வலயத்தைத் தேடுங்கள்'' என்று பணித்த பல்கேரிய நாட்டு விமானியின் தகவல்களே அதிர்ச்சி, ஆச்சரியம்மிக்கவை!

''கொழும்பை அழைக்கிறோம்... கொழும்பை அழைக்கிறோம்......நாம அழைப்பது கேட்கிறதா?'' என்று ஒரு விமானியின் அபயக் குரலை இவர் தமது விமானத்திலிருந்து கேட்டுள்ளார்.

பா. அனந்தகிருஷ்ணன்

இதனைத் தொடர்ந்து இலங்கை விமானநிலைய கட்டுப்பாட்டுக் கோபுரத்துடன் தொடர்புகொண்டு இந்த அபாய அறிவிப்பை தெரிவிக்க முனைந்துள்ளார் ஆனால் அந்த கோபுரம் இந்த அறிவிப்பை ஏற்க மறுத்துவிட்டதாம்!!!

பலதடவைகள் முனைந்தும் இறுதியாகத் தோற்றுவிட்டார் பின்னர் அந்த அபயஒலி கிடைத்த வலயத்தை நோக்கி தமது விமானத்தை சிறிதுதூரம் செலுத்தியுள்ளனர். கடைசியாக தமது விமானம் பயணிகள் விமானமானதால் தேடுதலை நீடிக்காதுகொழும்பு திரும்பினார்.

### நல்ல செய்தி ஆகட்டும்

கொழும்பில் வைத்து தமது சகா ஒருவரிடம் விமானத்தை ஒப்படைத்து அதை தாயகம் அனுப்பிவிட்டு இங்கு நின்று அந்த 'லீயர்ஜெட்'பற்றி அறிவதில் எம்முடன் ஒருவராகியுள்ளார் அந்த விமானி!

இவ்வாறு சகலரையும் ஒரு கலக்குக் கலக்கிவரும் அந்த 'உபாலிஜெட்' அந்தமான் தீவில் இறங்கியிருக்கலாம் என்று ஊகிக்கப்படுகிறது.

இந்த ஊகம் நிஜமானதாகி அதனுள்ளிருந்தவர்கள் உயிருடன் கண்டுபிடிக்கப்பட்டார்கள் என்று அடுத்த செய்தி வரவேண்டுமென்றே முழு இலங்கையும் எதிர்பார்க்கிறது!

### கொழும்பில் நடந்தது

## காசாளரை வழிமறித்து ரூ. 48 ஆயிரம் கொள்ளை

(கொழும்பு)

சுகததாஸ விளையாட்டரங்கில் பணிபுரியும் ஊழியருக்கு ஊதியம் வழங்குவதற்காக வங்கியிலிருந்து கொண்டுவரப்பட்ட பணம் 48 ஆயிரம்ரூபா துப்பாக்கிமுனையில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

மேற்படி ஊழியர்களுக்குரிய மேலதிக கொடுப்பனவுகளுக்கான செக்கை கிராண்ட்பாஸ் மக்கள் வங்கியில் மாற்றி பணமாக்கிக் கொண்டுவந்த காசாளரும் இன்னொருவரும் தங்கள் காரியாலய கேட்டைத் திறந்துகொண்டு உள்ளே செல்ல எத்தனித்தவேளையில் துப்பாக்கியுடன் அவர்களை வழிமறித்து மூவர் பெண் காசாளரை இழுத்துத்தள்ளிவிட்டு அவரிடமிருந்த பணப் பையைத்தூக்கிக்கொண்டு வழியில் வந்த கார்ஒன்றை மறித்து ஓடித்தப்பியுள்ளனர்.

இதுசம்பந்தமாக கொழும்பு குற்றப்பிரிவு பொலிஸ் அதிபர் ஐ. ரி. கனகரத்தினம் மேற்பார்வையில் இன்ஸ்பெக்டர் கனகரட்ணம் தலைமையிலான பொலிஸ் கோஷ்டி விசாரணை மேற்கொண்டுள்ளது. (இ)

## ரூப வாஹினியில் இன்று

மாலை 6-00: இன்றைய நிகழ்ச்சிகள்பற்றிய தொகுப்பு.

6-01: குழந்தைகளுக்கான இசை நிகழ்ச்சி.

6-15. கார்ட்டூன் திரைப் படம்.

6-30: இளைஞர்கள் விவகாரம் சம்பந்தமான நிகழ்ச்சி [தொடர் அம்சம்]

7-00: செய்திமஞ்சரி (தமிழ்)

7-14: நாளைய நிகழ்ச்சிகள் பற்றிய தொகுப்பு.

7-15—இன்றைய நடப்பு பற்றிய அறிக்கை.

8-15: செய்தி மஞ்சரி (சிங்களம்)

8-29: நாளைய நிகழ்ச்சிகள் பற்றிய தொகுப்பு.

8-5?: சிங்களப் படம்.

9-30: செய்தி மஞ்சரி (ஆங்கிலம்)

9-45: சிங்களப்படம் தொடர்ச்சி)

11-00: ஒளிபரப்பு முடிவு.

## கிராமமக்கள் இதயங்களில் வாழ்பவர்

அமரர் திரு. சி கந்தவனம் அல்வாய் தெற்கில் சாதாரண குடும்பத்தில் பிறந்தவர் சாதாரணமனிதனாகவே தன் வாழ்க்கையை ஆரம்பித்துக் குறுகிய காலம் வாழ்ந்தாலும் தன் சமூகத்தொண்டின் சாதனைகளால் இக்கிராம மக்கள் இதயங்களில் நிலையான இடத்தைப் பெற்றவர்.

இக்கிராம ஒருபகுதி மக்களுக்கு நீண்ட காலத்தேவையாக இருந்து வந்த பல நோக்குக் கூட்டுறவுக் கிளைக் கடையை அமைப்பதில் பல சிரமங்களுக்கும் கஷ்டங்களுக்கும் மத்தியில் வெற்றிகட்டு ஸ்தாபித்தவர். மனேஜர் பதவி வந்த போது கூடத் தான் ஏற்காது இளைஞர்க்கே என வழிகோலியவர் அல்வாய் தெற்கு பீ 21 கிளை அவர் சேவையின் ஞாபகச் சின்னம்.

அல்வாய் மனோகரா சனசமூகநிலையம் தனக்கென நிலையான இடம்தேடி அலைந்த காலம் அது பணபலமுடையோர், நிலவளமுடையோர் பலரிருந்தும் அல்வாய் மனோகரா ச. ச. நிலையம் ஊரின் மத்தியில் நிலையூன்றி இக்கிராம மக்களின் வளர்ச்சியை கருதித் தனது நிலத்தின் ஒரு பகுதியை நன்கொடையாக வழங்கிய வள்ளல், பகுத்தறிவின் பக்குவம் உணர்ந்த ''சிற்பி''

சிற்ப, சித்திர வேலைகளில் இளம்பராயத்தில் தொடக்கம் ஈடுபாடுகொண்டவராக வழிகாட்டியாக வாழ்ந்தவர். நல்ல நாடக நடிகருங்கூட.

சைவசமய வழிபாடுகளிலும் இறைநம்பிக்கையிலும் வாழ்ந்தவர் வீரபத்திரர் ஆலயத்தை நடாத்தியவர்.

இக்கிராமப் பொதுவிளையாட்டு விழாவைப் பரந்த

[8-ம் பக்கம் பார்க்க]

# வாள் வெட்டுக்கு ஒருவர் பலி!

## சண்டிலிப்பாயில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

இரு சமூகத்தவரிடையே ஏற்பட்ட பழைய பகைமை வாள் வெட்டில் முடிந்தது.

இதனால் ஒருவர் பலியானார். மற்றவர் படுகாயமடைந்தார்.

சண்டிலிப்பாயில் நேற்று முன்தினமிரவு இச் சம்பவம் நடைபெற்றது.

வாள் வெட்டுக்கிலக்காகி மரணமானவர் வேலாயுதம் செல்வராசா (35 வயது) ஐந்து பிள்ளைகளுக்குத் தந்தையாவார். மற்றவர் குஞ்சன் என்றழைக்கப்படும் சற்குணராசா (40 வயது) இவர் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சத்திர சிகிச்சைக்குட்படுத்தப்பட்டார்.

வாள் வெட்டுக்கிலக்காகிய இருவருக்கும், மற்றும் மூன்று நபர்களுக்குமிடையே கள் அருந்துமிடத்தில் வாக்குவாதம் ஏற்பட்டதாகவும், இதனைத் தொடர்ந்து வீட்டுக்கு வரும்வழியில் பனைவடலிக்குள் வைத்து இனந்தெரியாத நபர்களால் இருவரும் வாள்வெட்டுக்கிலக்காகியதாகவும் மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பதில் நீதவான் எஸ். அமிர்தலிங்கம் மரண விசாரணை நடாத்தினார்.

காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சப் இன்ஸ்பெக்டர் ஐயாத்துரை சாட்சிகளை ஆஜர் செய்தார்.

சட்ட வைத்திய அதிகாரி வைத்தியகலாநிதி எஸ் சுப்பிரமணியம் பிரேத பரிசோதனை நடத்தினார்.

மரணவிசாரணையின் பின்னர் பதில் நீதவான் எஸ். அமிர்தலிங்கம் கொலை எனத் தீர்ப்பளித்து சந்தேக நபர்களைக் கைதுசெய்து விசாரணைகளைத் தொடருமாறு பொலிசாருக்கு உத்தரவிட்டார்.

இந்த வாள்வெட்டுச் சம்பந்தமாக 8 பேரைப் பொலிசார் தேடி வலைவிரித்துள்ளனர். (மா)

# நிறைகுறைந்த பாண்: பாவனையாளர் சங்கம் நடவடிக்கை

(மாவிட்டபுரம்)

வசாவிளான்பகுதியில் நிறை குறைந்த பாணைகடைகளுக்கு விநியோகம் செய்த பேக்கரிக்காரர் ஒருவரை வசாவிளான் பாவனையாளர் சங்கத்தினர் தமது திடீர் பரிசோதனையின் போது கண்டுபிடித்தனர்.

வசாவிளான் பாவனையாளர் சங்கத்தைச்சேர்ந்த சி. சுப்பிரமணியம், சு. இராசசிங்கம், சு. இலங்கைநாயகம், கிராம சேவகர் ஜே. அருளானந்தம் ஆகியோர் இத்திடீர் பரிசோதனையில் இடம் பெற்றிருந்தனர். ஏழாலையைச் சேர்ந்த பேக்கரி ஒன்றினால் விநியோகம் செய்யப்பட்ட மேற்படி பாணில் 450கிராமுக்குபதிலாக 420 கிராமே நிறை இருந்ததாக மேற்படி பரிசோதனைக்குழு தெரிவித்தது.

இதுபற்றி யாழ். மாவட்ட உள்நாட்டு வியாபார ஆணையாளருக்கு அறிவித்துள்ளதுடன் மேலும் இப்பகுதியில் பாண் விநியோகிப்பவர்கள் மீது தீவிர கண்காணிப்பு மேற்கொள்ள வசாவிளான் பாவனையாளர் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

# இலங்கை இளைஞர், யுவதி கனடா சுற்றுலா

[யாழ்பாணம்)

இளைஞர் சேவைபரிமாற்றுத் திட்டத்தின் கீழ் இலங்கையைச் சேர்ந்த சுமார் 100 இளைஞர்கள், யுவதிகள் மே மாதம் கனடாவுக்குச் செல்லவிருக்கின்றனர். இந்த இளைஞர் பரிமாற்றுத்திட்ட சுற்றுலாவுக்கான ஏற்பாடுகளை தேசிய இளைஞர் சேவை மன்றம் செய்துவருகிறது.

இதேபோல் கனடாவிலிருந்தும் இளைஞர் பரிமாற்றுத் திட்டத்தின்கீழ் கனடா இளைஞர்கள் இலங்கைக்கு வருகை தருவார்கள் என்றும் தெரியவருகிறது. [வண.நிரு.]

# முதியவர்களுக்கு பொன்னுடை

[பண்டத்தரிப்பு]

பெரியவிளான் கிராமோதய சபையின் ஆதரவில் இளவாலை திருக்குடும்ப கன்னியர்மட மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற முதியோர்தின விழாவில் 100 வயது நிறைவு பெற்ற இப்பகுதியைச்சேர்ந்த இரு முதியவர்கள் பொன்னுடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர்.

இளவாலை பங்குத்தந்தை அருட்திரு. மல்கம் அடிகளார் இவர்களுக்குச் சபையின் சார்பில் பொன்னுடை போர்த்தினார்.

கிராமோதய சபைத் தலைவர் திரு. வி. பிரான்சிஸ் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பங்குத்தந்தை அருட்திரு. மல்க்கம் அடிகளார் உரையாற்றுகையில்; முதியவர்களே நாட்டின் பெருஞ்செல்வங்களென்றும், அவர்களின் ஆற்றல்களையும், அனுபவங்களையும் எமது இளம் சந்ததியினர் கௌரவிக்க வேண்டுமென்றும், முதியவர்களை வயதுபோனகாலத்தில் அல்லற்படவிடாது பேணிப் பாதுகாத்துவருவது இறைவனுக்குச்செய்யும் சேவையாகும்' என்றும் குறிப்பிட்டார். இறுதியில் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

# இலக்கிய ஆர்வலர் சந்திப்பு

(யாழ்ப்பாணம்]

''கூடல்மாநகரமாம் மதுரையில் புலவர்கள் சங்கமித்து அன்று தமிழ்வளர்த்தார்கள். அதுபோல இலக்கிய கர்த்தாக்களும் ஆர்வலர்களும் பரவலாக சந்திப்புக்களை நடாத்துதல், சமகால இலக்கியம் பற்றிய அறிமுகங்களை செய்தல், இலக்கியம் வளர, ஆரோக்கியமான சூழலை உருவாக்கலாம்'' என காங்கேசன்துறை தொகுதி கலை இலக்கிய ஆர்வலர் ஒன்றியத்தின் மூன்றாவது சந்திப்பு வீமன்காமம் மகாவித்தியாலயத்தில் கடந்த ஞாயிறு நடந்தபோது, தலைமைவகித்த அதிபர் திருமதி பு. சச்சிதானந்தம் குறிப்பிட்டார். திரு. வை. நாகராஜன் வரவேற்புரை கூறினார். கோகிலா மகேந்திரனின் 'மனித சொரூபங்கள்' என்ற சிறுகதை நூலைத் திரு. வை. தனேஸ்வரன் அறிமுகம் செய்தார். நூலாசிரியர் 'ஏன் எழுதினேன்' என்பதற்கு விளக்கம் கொடுத்து, பல்வேறு விமர்சனங்களுக்கும் சுவையாகப் பதில் அளித்தார்.

'ஈழத்து தமிழ் இலக்கிய வளர்ச்சியில் பத்திரிகைகளின் பங்களிப்பு' என்ற தலைப்பில் நடந்த கலந்துரையாடலில், யாழ். பல்கலைக்கழக உதவி விரிவுரையாளர் நா. சண்முகலிங்கம் பேசும்போது கொழும்புவார ஏடுகளில் விளம்பரங்கள் சினிமா செய்திகள், கவர்ச்சிப்படங்கள் கூடிய பக்கங்களை எடுக்கிறதெனவும், ஏழு வீதமான கொலங்களிலேயே இலக்கிய விடயங்கள் வருகின்றன எனவும். விற்பனை நோக்கில் இந்நிலை தவிர்க்க முடியாமலும் இருக்கலாம் எனவும் குறிப்பிட்டு, கூடிய பக்கங்கள் இலக்கியத்துக்கு ஒதுக்கப்படவேண்டுமென்றார். 'ஒதுக்கப்படும் குறைந்த பக்கங்களிலும் பண்பாடற்ற நக்கல் இலக்கியங்கள் எழுத்தாளரின் புறவாழ்வை சுட்டும் நையாண்டிகளும் வருகின்றனவே' என்ற குரல் எழுப்பப்பட்டது. வார ஏடுகளில் வருவன தான் முடிந்த முடிவெனக் கொள்ளாது எழுத்தாளன் பேனாவைப் பிடிக்க வேண்டியதுதான் என்றார். த. சண்முகசுந்தரம், அகஸ்தியர் உட்பட பலர் கலந்து கொண்டனர். ஏ ரி.பொன்னுத்துரை நன்றிகூறினார்.

# இளைஞர்சேவை மன்றப்பயிற்சி வகுப்பு

[யாழ்ப்பாணம்]

தேசியஇளைஞர் சேவை மன்றத்தின்கல்வித்திட்டத்தின்கீழ் யாழ். மாவட்டத்தில் இளைஞர்கள் யுவதிகளுக்கான ஆங்கில வகுப்புகளும், தையல் வகுப்புகளும், நடத்தும் பணிகளில் யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைமன்ற அலுவலர்கள் ஈடுபட்டு வருகின்றனர். யாழ்ப்பாண மாவட்ட இளைஞர் சேவைமன்ற அதிகாரி திரு. எஸ். தேவராசா இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார்.

இம்மாதம் கொடிகாமம் பகுதியில் உள்ள இளைஞர் மன்ற யுவதிகளுக்கும் இளைஞர்களுக்குமான இந்த வகுப்புகள் கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. சாவகச்சேரி பிரதேச அலுவலர் திரு. செ. நாகேந்திரன் இதை ஏற்பாடு செய்திருந்தார். அடுத்தமாதமுதல் தீவுப்பகுதி இளைஞர்சேவைமன்றங்களுக்கான இப்பயிற்சி வகுப்புகள் ஆரம்பிக்கப்படவிருப்பதாக தீவுப்பகுதி . பிரதேச அலுவலர் திரு. எஸ். முருகையா தெரிவித்தார்.

]வண் – நி]

# கூட்டுறவுத்திட்ட கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

இளைஞர்சேவை மன்றத்தின் கூட்டுறவு நிறுவனமான ''நிஸ்கோ'' கூட்டுறவுத் திட்டம் தொடர்பான கருத்தரங்கொன்று அரச திணைக்கள உத்தியோகத்தர்களுக்காக இம்மாதம் 2 ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கிறது.

[வண் நிரு]


# மேர்ச்சன்ட் பினன்ஸ்

## லிமிட்டெட்.

## நிலையான வைப்புத் திட்டங்கள்

| காலம் | மாதாந்த வட்டி கொடுத்தல் | காலமுடிவில் வட்டி கொடுத்தல் |
|---|---|---|
| 7 மாத வைப்பு (வருட வட்டி) | —— | 19% |
| 9 மாத வைப்பு ( ,, ,, ) | —— | 22% |
| 1 வருட வைப்பு ( ,, ,, ) | 24% | 25% |
| 2 வருட வைப்பு ( ,, ,, ) | 24% | 27% |
| 3 வருட வைப்பு ( ,, ,, ) | 24% | 30% |

- நிலையான வைப்புக்கணக்கு தொடங்குவதற்கு செலுத்தவேண்டிய குறைந்த தொகை ரூபா 1000/- மட்டுமே.
- வட்டி மாதாமாதம், மூன்று மாதத்திற்கொரு முறை, ஆறு மாதத்திற்கொரு முறை, வருடமொருமுறை வைப்புப்பணம் கொடுத்தவர்களின் விருப்பப்படி கொடுக்கப்படும்.

(1979-ம் ஆண்டின் 27-ம் இலக்க, நிதிக் கம்பனிகளைக் கட்டுப்படுத்தற் சட்டத்தின் 18-ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட 1981-ம் ஆண்டின் 1-ஆம் இலக்க விதிகளின் படி, கீழ்க்காணும் தகவல்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.)

கூட்டிணைக்கப்பட்ட தேதி : 2-5-1979.

பிரதான தொழில்வகைகள் :

✶ வியாபாரப் பொருட்களின் பொறுப்பில் கடன் வழங்கல், வங்கி, மறுதாபனக் கடன் ஒழுங்கு செய்தல், வர்த்தக வாகனங்கள் (லொறி) உழவு யந்திரங்கட்கு (ட்ராக்டர்) மினிபஸ் முதலியன வற்றிற்கு வாடகைக் கொள்வனவுக்குக் கடன் கொடுத்தல், இடைக்கால கடன் வழங்கல், காப்புறுதி செய்யப்பட்ட பண்டகசாலை வசதிகள்.

| | 31-3-80ல் முடிந்த ஏழு மாதத்திற்கு | 31-3-81ல் முடிந்த வருடத்திற்கு | 31-3-82ல் முடிந்த வருடத்திற்கு |
|---|---|---|---|
| | ரூ, 000 | ரூ, 000 | ரூ, 000, |
| பங்கு மூலதனம் ... | 69, | 100, | 100, |
| ஒதுக்கிய நிதி ... | — | — | 300, |
| நிலையான கடன் முறிகள் ... | 460, | 585, | 597, |
| வைப்புக்கள் ... | 838, | 3,444, | 6,615, |
| பெற்ற கடன்கள் ... | — | — | — |
| வரிக்குமுன் லாபம் ... | 7, | 187, | 191, |
| வரிக்குபின் லாபம் ... | 7, | 187, | 191, |
| வழங்கப்பட்ட பங்குலாபங்கள் ... | — | 25% | 30% |

இயக்குநர்சபை :

டாக்டர் யோகு பசுபதி M.B.B.S. (Cey), D. C. H. (Lond), M.R.C.P. (Lond). — தலைவர்
A. சோமசுந்தரம்பிள்ளை, B.A., F.C.A. — முகாமைத்துவ இயக்குநர்
K. லோகநாதன், B.S.B.A. (U.S.A.) — இயக்குநர் — ஆலோசகர்
S. தனபாலசிங்கம் B. Sc. (Cey) — இயக்குநர் - முகாமையாளர்
S. மகேந்திரா, B. Sc (Cey.) — இயக்குநர் - கடன்வசதிகள்
K. நடராசா, B.Sc, Bar-at-Law, Attorney-at-Law.
N. சிவசிதம்பரம், Retd. S.L.A.S.
V. கார்த்திகேசு, B. Sc., A. M. B. I. M, A. M. I., Prod. E.

விபரங்கட்கு தொடர்புகொள்க:

தலைமைக் காரியாலயம்
129, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24183

வழிகாட்டு அலுவலகம்
52/1, ராஜசிங்க றோட்,
வெள்ளவத்தை.
83259

# வேண்டும் வரம் அளிக்கும் பொலிகண்டி வீரபத்திரர்

சரித்திரப் புகழ்பெற்று விளங்கும் பொலிகண்டி கந்தவன ஆலயத்திற்கு சற்று அருகாமையில் தென்திசையில் கோயில் கொண்டருளி இருப்பவர் வீரபத்திரப் பெருமான். இப்பெருமானை திலகம்பற்றை வீரபத்திரர் என்றும், திலகம் பற்றை வீரபத்திரர் என்றும் மக்கள் மனக்களிப்போடு அழைப்பர். வேண்டும் வரமருளும்வள்ளலாக விளங்குகிறார்.

எமது வீரபத்திரர் ஆலய அமைப்பே ஒரு விசித்திரமானது. ஆலயங்கள் கிழக்கு நோக்கி இருக்கும் அன்றேல் வடக்கு நோக்கிய வண்ணம் அமைந்திருக்கும். ஆனால் பொலிகண்டி திலகம்பற்றை வீரபத்திரர் ஆலயம் தென் திசையை நோக்கியவண்ணம் அமைந்துள்ளது இதுஒருதனிச் சிறப்பென்றே கூறவேண்டும்.

வேதஆகம விதிகளுக்கு அப்பாற்பட்ட நிலையில் ஆலய பார்வை அமைந்துள்ளது.

பெரியோர்களும், அறிஞர்களும், ஆய்வுத்திறன் படைத்தவர்களும், அக்கறையுடையவர்களும்கூறுவது ஆலய முகப்புத்திசைமாறி அமைந்ததனால் தான் எமது அப்பனின் பெயருக்குரிய தன்மை குறைந்து சாந்த சொரூபியாகக் காட்சியளித்துக்கொண்டு கருணைக் கடலாக விளங்குகிறார் என்பதாகும்.

வி. கே. பாலசிங்கம்

எம்பெருமானின் ஆலயத்தோடு விநாயகர் ஆலயம் கிழக்குமுகமாக அமைந்துள்ளது அத்துடன் காத்தவராயன். கழுவேறி, வைரவர் போன்ற பரிவார மூர்த்திகளின் ஆலயங்களும் அங்கு அமைந்துள்ளன.

பொலிகண்டி வீரபத்திரர் ஆலயம் ஆரம்ப காலத்தில் சிறியதொரு அமைப்பில் இருந்தது. திங்கட்கிழமைகளில் ஒருகால பூசை மாத்திரம் நடைபெற்றுவந்தது. அத்துடன் ஒவ்வொரு வருடமும் ஆவணிமாதத்தில் ஒருதிங்கள் இரவு தொடங்கி மறுநாள் செவ்வாய் காலைவரை பொங்கல்விழா நடைபெற்றுவருவது வழக்கத்தில் இன்றும் இருக்கிறது.

எம்பெருமானுக்கு ஆண்டுதோறும் மாசிமாதத்தில் பூர்வ பட்சத்து ஐந்தாம்நாள் கொடியேற்று வைபவத்துடன் திருவிழா ஆரம்பமாகின்றது. இந்த ஆண்டு மாசி மாதம் 5ம் திகதி [17–2–83] வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் திருவிழா ஆரம்பமாகிறது. 25–2–83 வெள்ளிக்கிழமை 9–ம் திருவிழாவாகிய தேர்த்திருவிழாவும் 26–2–83 சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவிருக்கின்றன. 9–ம் திருவிழாவன்று எம்பெருமான் அலங்காரத் தேரில் வீதிவலம் வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். அன்றையதினம் ஆலயக் கூட்டுப்பிரார்த்தனைக் குழுவினர் எம் பெருமானின் நாம கீர்த்தனைப் பஜனைசெய்வார்கள், தீர்த்த உற்சவம் மாசிமக நன்னாளில் எம்பெருமான் விநாயகப்பெருமானோடு எழுந்தருளிஊர்வலமாக வந்து தீர்த்தமாடும் காட்சி கண்கொள்ளாக்காட்சியாகும். தீர்த்தம் ஆடியபின் திருஊஞ்சலில் எம்பெருமான் பள்ளி கொள்ளும் திருக்காட்சி இடம்பெறும் இவ்வேளை திருஊஞ்சல் பாக்கள், மங்கள வாத்தியங்கள் முழங்க இனிமையாக இசைக்கப்படும்.

சீரும் சிறப்பும் பெற்று விளங்கும் பொலிகண்டி வீரபத்திரர் ஆலயம் இன்று மேலும் பன்மடங்கு விஸ்தரிக்கப்பட்டு மண்டபங்கள் பல அமைக்கப்பட்டு தனிச்சிறப்புடன் விளங்குகின்றது.

## லொறி விபத்து மரணவிசாரணை

(வவனியா)

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு வவனியாவிலுள்ள மூன்றுமுறிப்பு என்னுமிடத்தில் லொறியொன்று பாலை மரத்துடன் மோதியதால் ஸ்தலத்திலேயே மரணமான கதிரவேலு தேவராஜா, யோசவ் அன்ரன் ஆகியோரின் மரணவிசாரணைவவனியா ஆஸ்பத்திரியில் நடைபெற்றது.

வவனியா பதில் மாவட்ட நீதிபதியும், மரணவிசாரணை அதிகாரியுமான திரு. ஆர். வி. விக்வராஜா மரண விசாரணை நடத்தினார், பிரேதபரிசோதனையை வவனியா மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். ரஞ்சன் மேற்கொண்டார்.

இறந்தவர் இருவரினதும் தலையில் ஏற்பட்ட சிதறல்களால் மரணம் சம்பவித்ததாக வைத்திய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

லொறியின் பின்பக்கத்திலிருந்து பிரயாணம் செய்த சர்த்தார்சீனி, கலிசெல்வரத்தினம் ஆகியோரும் சாட்சியமளித்ததையடுத்து மரணவிசாரணை அதிகாரி விபத்து மரணமென தீர்ப்பளித்தார். (வ)

## இன்றைய பலன்

மாசி மாதம் 5–ம் திகதி வியாழக்கிழமை (17—2—83)

மேடம்: பயன்தரும் பயணம் இன்று மேற் கொள்ளப்படலாம், பழைய நினைவுகள் தலைதூக்கும். வார்த்தையில் வசீகரமும் வாழ்க்கையில்சுவையான நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

இடபம்: சிந்தையில் தடுமாற்றம் ஏற்படும். செய்தொழிலால் நஷ்டம் ஏற்படலாம், புதிய முதலீடுகளை இன்று தவிர்த்தல் நன்று. சிலருக்கு நூதன ரோகம் தென்படலாம்.

மிதுனம்: சந்திப்பின் மூலம் பயனுள்ள தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வீர்கள், காத்திருந்த கண்களுக்குக் களிப்பூட்டும்விருந்தொன்று கிடைக்கும், வாகன விருத்தியுண்டு.

கடகம்: அதிர்ஷ்டகரமான தினம், சிலர் வாழ்க்கையில் திரவிய இலாபத்திற்கும் இடமுண்டு, மனை வாழ்வில் மகிழ்ச்சி தென்படும், வீட்டில் சுபகாரியமொன்று இடம்பெறலாம்.

சிங்கம்: உங்கள் நடவடிக்கைகள் அனைத்தும் இன்று வேவு பார்க்கப்படும், தொழில் துறையில் முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு சதி நடைபெறலாம், அகால போசனத்தின் மூலம் வயிற்றுக் கோளாறு ஏற்படலாம்.

கன்னி: கனிவான சம்பவங்கள் நடைபெறும், அபிப்பிராய பேதங்கள் மறைந்து பிரிந்தவர்கள் மீண்டும் இணைவர், குழந்தையொன்றின் முன்னேற்றம் மகிழ்ச்சியைத்தரும்.

துலாம்: விபத்திற்கு இடமேற்படும், எதிலும் நிதானத்துடன் நடந்து கொள்ளவும், பலவழிகளிலும் பணம் செலவாகும், சிலர் கடன்படவும் நேரிடலாம். எதிரியின் அட்டகாசம் அதிகரிக்கும்.

விருச்சிகம்: பரோபகார சிந்தை மேலிடும், பொதுப் பணிபுரிவதில் ஆர்வம்பிறக்கும் மதத் தலைவர் ஒருவர் நல்லாசி வழங்குவார், பெற்றோரின் உதவி தப்பாமல் கிடைக்கும், பொன்னான தினம்.

தனு: கூட்டு வியாபாரத்தில் முன்னேற்றமுண்டு, வெளியூரிலிருந்து திருப்திகரமான செய்தி கிடைக்கும், கடமையில் ஆர்வம் பிறக்கும், நிம்மதியான தினம்.

மகரம்: செலவுக்கு வேண்டிய பணம் தாராளமாகக் கிடைக்கும், நீண்டநாள் கொடுத்த கடன் இன்று மீண்டும் வந்து சேரலாம், பிறந்த இடத்தின் பெருமை நிலைநாட்டப்படலாம்.

கும்பம்: பிரிவின் தாக்குதலால் வேதனைப் படுவீர்கள், தற்பெருமைக்காகத் தவறான பாதையில் காலடி எடுத்து வைக்க நேரிடலாம், தொழிலில் தயக்கநிலை தென்படும்,

மீனம்: பிள்ளைகளின் தொல்லைகள் கவலையைத்தரும், பிறருடன் பகைத்துக் கொள்ளவும், நேரிடும், குடும்பத்திலும் சிறிய புயல் வீசலாம். வெளியிடத்துத் தொடர்புகளில் அமைதி வேண்டும்.

சோதிடக் கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை.

## வலைப்பந்தாட்டம்: அரியாலை சாம்பியன்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட ரீதியில் நடைபெற்ற பெண்களுக்கான வலைப்பந்தாட்டப்போட்டியில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் சாம்பியன் கேடயத்தைத் தட்டிக்கொண்டது.

இலங்கை வலைப்பந்தாட்டச் சங்கத்தின் அனுசரணையுடன் நடைபெற்ற இச்சுற்றுப்போட்டியில் 18 கழகங்கள் கலந்து கொண்டன.

இறுதிஆட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் யாழ். பல்கலைக் கழகக் கோஷ்டியை தோற்கடித்து சாம்பியன் பட்டத்தைப் பெற்றது.

இப்போட்டி யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

## இராமாயண பாராயணம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை — மட்டுவில் ஆயப்பாடி ஆச்சிரமத்தில் இன்று முதல் இம்மாதம் 27ம் திகதி வரை இராமாயண பாராயணமும் விசேட பூசைகளும் நடைபெறும்.

27ம் திகதி மாசி மகத்தை முன்னிட்டே இந்நிகழ்ச்சிகள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன.

(ப)

## பாரதி நூற்றுண்டு விழா

(வெள்ளவத்தை)

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் பாரதி நூற்றுண்டுத் தேசிய விழாக் குழுவின் பாரதி நூற்றுண்டு விழா ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

தமிழக பேச்சாளர்களின் வருகை தாமதமாகியதால் மார்ச் மாதம் 19–ம் 20–ம் திகதிகளில் விழாவை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

பாரதி நூற்றுண்டு விழாவில் கலந்துகொள்ள இலங்கை வரவிருந்த பேராசிரியர் எஸ். ராமகிருஷ்ணன், கவிஞர் சிதம்பர ரகுநாதன், நாவலாசிரியை திருமதி. ராஜம் கிருஷ்ணன் ஆகியோர் விசாகிடைக்காததால் மார்ச்மாதம் வருவதாக அறிவித்துள்ளனர்.

பாரதி நூற்றுண்டு விழா கொழும்பில் இரண்டு நாட்கள் நடைபெறும். முதல்நாள் ஈழத்து எழுத்தாளர்களின் புகைப்படக் கண்காட்சியும், மகாகவி பாரதி நூற் கண்காட்சியும் நடைபெறுவதுடன் 'மகாகவி பாரதி' நாடகமும் மேடையேறும். இரண்டாம் நாள் பரிசளிப்பும், விழாவும் நடைபெறும்.

பாரதிவிழாவில் கலந்து கொள்ளும் தமிழக பேச்சாளர்கள் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மலையகம் ஆகிய இடங்களில் நடைபெறும் பாரதிவிழாக்களிலும் கலந்து கொள்வார்கள்,

## பரம்பரை...

[3–ம் பக்கத் தொடர்ச்சி

[3–ம் பக்கத் தொடர்ச்சி

எம். வீரப்பன் நேற்று செவ்வாய் மாலை தெரிவித்தார்.

மேலும் அமைச்சர் இதுபற்றித் தெரிவிக்கையில்; பரம்பரை அறங்காவல் பதவியில் நிர்வாகிக்கப்படும் தமிழகக் கோவில்களில் பலவற்றின் நிர்வாக உரிமை ஆட்சேபனை வழக்குகள் பல தமிழகநீதிமன்றங்களில் பெருமளவில் நடைபெற்று வருகின்றன. மேலும் புதிதாக வழக்குகள் தாக்கலாகி வருகின்றன. இதனால்கோவில்களின் நிர்வாகம் பிரச்னைகளை சமாளிக்க வேண்டியும், வழிபாட்டு உரிமைகளுக்குப் பாதகமாகவும் நடைமுறைகள் ஏற்பட்டு வருவதாகவும் மாநில அரசின் தலையீடு விரும்பப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

(உ)


றீகல் (யாழ். நகர்)
அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க மேலும் 3 தினங்கள் மட்டும்
எங்க வீட்டுப் பிள்ளை

ஹறன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சுதாகர் – ராதிகா
கிழக்கே போகும் ரயில் (கலர்

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி– 6–15, 9–15
சனி. ஞாயிறு 2–30
முரட்டுக் காளை

சாந்தி (யாழ். நகர்)
10-30, 2-30, 4-45, 7-00 9-30
Terence Hill—Ernest Borgnine in
Super Snooper (Action–Comedy–Color)

வெலிங்டன் [யாழ். நகர்]
தினசரி 5 காட்சிகள்
BLOODY GOLANTINA
நாளை நீலமலர்கள்

லிடோ [யாழ். நகர்]
தினசரி 4 காட்சிகள்
கமல்–ஸ்ரீதேவி
பதினாறு வயதினிலே

ஸ்ரீதர் (யாழ். நகர்) தினசரி 5 காட்சிகள்
10–30, 2–00, 4–30, 7–00, 9–30
16--18
CUBA

ராணி தினசரி 10–00, 2–00, 6–00, 9–30
(யாழ். நகர்)
ஆந்திரா முதலமைச்சர் என். டி. ராமாராவ், ஜெமினி – சாவித்திரி நடித்த
மாயா பஜார்
பாடசாலைப் பிள்ளைகளுக்கு விசேட ஒழுங்குகள் செய்துதரப்படும். முகாமையாளருடன் தொடர்பு கொள்ளவும்.

யாழ்நகரில்இதுவே. கடைசி சந்தர்ப்பம்
இன்னும் சில தினங்கள் மட்டும்
வின்ஸர் தினசரி 4 காட்சிகள் (யாழ்நகர்)
✶ சிவாஜி ✶ வாணிஸ்ரீ ✶ பாலாஜி ✶ நாகேஷ்
"வசந்தமாளிகை"
[கலர்]
(இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புதிய பிரதி)

மனோகரா தினசரி 10-30, 2-15, 6-00, 9-45
(யாழ். நகர்)
ஆந்திர முதலமைச்சர் என். டி. ராமராவ்
கே. மாலதி, எஸ். வி. ரங்கராவ், ரேலங்கி
பாதாள பைரவி
(இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம்புதிய பிரதி)

குறிப்பிட்ட தினங்கள் மட்டும்
ராஜா தினசரி 10-00, 2-00, 6-00, 9-30
(யாழ்- நகர்)
சிவாஜி – சாவித்திரி – தேவிகா
கர்ணன் இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம் புதிய பிரதி (ஈஸ்ட்மன்கலர்)
பாடசாலை பிள்ளைகளுக்கு விசேட ஒழுங்குகள் செய்து தரப்படும். முகாமையாளருடன் தொடர்பு கொள்ளவும்.
எமது அடுத்த வெளியீடு
துணி வேதுனை

## சிமெந்து தொழிற்சாலையில் ரூ. 2 லட்சம் பெறுமதியான டிராக்டர் கடத்தப்பட்டது

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையின் 3ம் கட்டப் பிரிவில் பயன்படுத்தப்பட்டு வந்த சுமார் 2 லட்சம் ரூபா பெறுமதியான டிராக்டர் ஒன்று இனந்தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நண்பகல் வேளை மேற்படி தொழிற்சாலையின் 3ம் கட்டப் பிரிவில் நின்ற 7ம் இலக்க டிராக்டரை துறைமுகப்பகுதிக்கு உடனடியாகக் கொண்டுவரும்படி துறைமுக வேலைப்பகுதிப் பொறுப்பதிகாரி பணித்திருப்பதாகக் கூறி இரு வாலிபர்கள் எடுத்துச் சென்றுள்ளனராம்.

தொழிற்சாலை வாயிலில் நின்ற பாதுகாவல் உத்தியோகத்தர்களுக்கும் இவர்கள் டிமிக்கி கொடுத்துச் சென்றுள்ளதாகக் கூறப்படுகின்றது. இச்சம்பவம்பற்றி தொழிற்சாலையின் 3ம் கட்ட வாகனப் பராமரிப்பு அதிகாரி காங்கேசன் துறைப் பொலிஸில் புகார் செய்துள்ளார்.

டிராக்டரைக் கடத்தியவர்கள் முன்பு இங்கு வேலைசெய்தவர்களாய் இருக்குமென்று சந்தேகிக்கப்படுகின்றது.

## ஓய்வுபெறுவோர்க்கு ரூ.10.000 வழங்கும் திட்டம்

சென்னை,பெப்,16.

தமிழ்நாட்டில் ஓய்வுபெறும் அரச சேவையாளர் ஆசிரிய சேவையாளர்களுக்கு மாநில அரசு 10,000ரூபா வழங்குவதற்கான திட்டம் நடைமுறைப் படுத்தவுள்ளது.

இத்திட்டம் பற்றித் தமிழ்நாடு மாநில அரசு ஆய்வு செய்துவருவதாகமாநில அமைச்சரவையின் செயலர் திட்டம் தெரிவித்தது.

## உபாலி...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

னும் மர்மமாகவே நீடிக்கிறது.

அதேநேரத்தில், பலதேச தேடுதலும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இன்று வியாழக்கிழமை 17ம் திகதி தனது 45-வது பிறந்த தினத்தைக் கொண்டாடும் தொழிலதிபர் உபாலி விஜேவர்த்தன, விபத்தில் உயிருடன் திரும்பலாம் என்றே அவரது வட்டாரங்களில் நம்பிக்கை தெரிவிக்கப்படுகிறது.

மலாக்கா நீரணைப் பகுதியல் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு விமானமொன்று கடலில் விழுந்ததைக் கண்டதாக அப்பகுதியில் வாழும் தீவு வாசிகள் சிலர் தெரிவித்திருப்பதாகத் தேடுதலில் ஈடுபட்டிருக்கும் இந்தோனேஷியாக் குழுத் தலைவர் தெரிவித்திருக்கிறார்.

அவுஸ்திரேலிய விமானி தெரிவித்துள்ள தகவல் தேடுதல் நடவடிக்கைகளுக்கு உற்சாகம் ஊட்டுவதாக அமைந்துள்ளது.

விமானத்திலுள்ள சமிக்ஞை கருவி ... கையில் கொண்டு செலும் 'டிரான்சிஸ்டர்' ... சர ஆபத்து சமிக்ஞைகளை அறிவிக்க முடியும் என்று கட்டுப்பாட்டுப் பிரிவுக்குப் பொறுப்பாகவுள்ள ரொனி டீ சேரம் தெரிவித்துள்ளார்.

இந்தோனேஷியா தேடுதல் குழு தலைவர் பூடு மோரெருனே கடந்த ஞாயிறு இரவு விமானமொன்று விழுந்ததை ஆதிவாசிகள் இலர் கண்டதாகத் தெரிவித்திருப்பதாகவும், அது உபாலியின் விமானமாக இருக்கலாமென்றும் தெரிவித்தார்.

இந்தோனேஷியாவின் 3 கப்பல்களும், 2 விமானங்களும், தொடர்ந்து தேடுதல் நடத்தி வருகின்றன. மலேசியாவின் 2 கப்பல்களும், 1 விமானமும் தேடுதலில் ஈடுபட்டுள்ளன. விமானங்கள் தாளப்பறந்தன.

## பொலிசார் மீண்டும் ரோந்து

[யாழ்ப்பாணம்]

சாவகச்சேரிப் பொலிசார் மீண்டும் ரோந்து சேவையில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர்.

இராணுவத்தினருடன் கூட்டாக ரோந்து சேவையிலீடுபடாமல், கான்ஸ்டபிள்கள் இருவர் இருவராக ஆயுதங்களின்றி ரோந்துக் கடமையில் ஈடுபட்டுள்ளனர். (மா)

## கோண்டாவில் மரணம்: கொலை என்று தீர்ப்பு

[யாழ்ப்பாணம்]

கோண்டாவில் மேற்கில் துப்பாக்கியால் சுடப்பட்டு மரணமான 'நாதன்' என்றழைக்கப்படும் செல்வநாதன் மரணம், கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

பதில் நீதவான் எஸ். அமிர்தலிங்கம் மரண விசாரணை நடாத்திய பின்னர் கொலை என்று நேற்றுத் தீர்ப்பளித்தார்.

கோலாலம்பூரிலிருந்து விமானம் புறப்படுமுன்னர் அமுக்கக் கோளாறு இருந்ததாக அறிவிக்கப்பட்டதாகவும், அது சரி செய்யப்பட்டபின்னர் புறப்பட்டதாகக் கூறப்படுகிறது.

மலேசிய நேரப்படி ஞாயிறு .5மணிக்கு உபாலி குழுவினர் புறப்படத் தீர்மானித்திருந்ததாகவும், தொலைபேசியில் ஒருவரின் அழைப்பு வந்ததால், அவருக்காகக் காத்திருந்துவிட்டு இரவு 8-30 மணிக்கு உபாலி குழுவினர் புறப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

விமான நிலையத்தில் உபாலி கலகலப்பாக இருந்ததாகவும், வழியனுப்பவந்த நண்பர்களுடனும், வர்த்தப் பிரமுகர்களுடனும் சிரித்துப்பேசிக் கொண்டபின் அவர் புறப்பட்டதாகவும் கூறப்படுகிறது. [க]

## புலேந்திரன்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

விசேட சேவை அதிகாரியான ஆறுமுகம் குமாரசிங்கம் ஆகிய ஐவரும் இந்த விசாரணையில் சந்தேகநபர்களாக இருக்கின்றனர்

சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணிகள் எம். சிற்றம்பலம், எம். சொர்ணபால ஆகிய இருவரும் ஆஜராகினர்.

சி ஐ டி. அறிக்கை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

சந்தேகநபர்களைப் பிணையில் விடுவிக்கச் சட்டத்தரணிகள் கோரிக்கை விடுத்தனர்.

விசாரணை மார்ச் 2ம்- திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

### பிணை விசாரணை

இதனையடுத்து, மேல்நீதிமன்றம் நீதிபதி திரு ஜே ஜி. ஆசீர்வாதம் முன்னிலையில் கூடியது.

புலேந்திரன் கொலை வழக்கில் சந்தேகநபர்களான துரைராஜா தேவராஜா, ஆறுமுகம் குமாரசிங்கம், தம்பிராஜா பெனடிக்ற் ஆகிய மூவரையும் பிணையில் விடக்கோரி சட்டத்தரணி எம். சிற்றம்பலம் மனுவொன்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்.

அரசதரப்பில் ஞானதாசன் ஆஜரானார். பிணை சம்பந்தமான விசாரணை நாளை நடைபெறும் என்று நீதிபதி அறிவித்தார்.

## துரித....

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ந்து காங்கேசன்துறை நோக்கி பரீட்சார்த்தமாக நேற்று அதிகாலை 5-45க்குப் புறப்பட்ட ரயில், நேற்று நண்பகல் 1145க்கு யாழ்ப்பாணம் வந்து 12-05க்கு காங்கேசன்துறை போய்ச் சேர்ந்தது.

இந்த பரீட்சார்த்த ரயிலில் ஜெனரல் மனேஜர் (தொழில் நுட்பம்) திரு லீ.வெல. உதவி முகாமையாளர் திரு டபிள்யூ. எச் ஜயசிங்க, பாவட்ட அத்தியட்சகர் திரு. பி. விநாயகமூர்த்தி, ரயில் சாரதி கே. பி. ஜீ. டீ. சில்வா மற்றும் திரு. எஸ். மூல்லைநாதன் ஆகியோர் பிரயாணஞ்செய்து நிலைமையை நேரில் பார்த்தனர்.

இந்த ரயில் இன்று காலை பரீட்சார்த்தமாக 5-40க்குப் புறப்பட்டு கொழும்பு கோட்டையை பகல் 12-15க்கு அடையும்.

## கிராமங்கள்...

[5ம் பக்கத் தொடர்ச்சி]

அடிப்படையில் ஆரம்பிக்கக் காரணமாயிருந்தவருள் ஒருவர் கரபந்தாட்ட வீரனாகவும் இருந்தவர்

பழமையின் பெருமைகளோடு புதுமையின் சாதனைகளையும் இக்கிராம மக்கள் நினைக்கும் போது அமரர் திரு. சி. சுந்தவனம் 'சிற்பி' அவர்களை நன்றியுடன் இக்கிராமம் என்றும் நினைக்கும்.

அல்வைத்தனி
ப. நோ. கூ. ச. கிளை 21 பீ.
அல்வாய் தெற்கு.

## கார்-லொறி...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

வும், பலாலிக்கு அண்மையில் மரமேற்றி வந்த லொறியுடன் விபத்துக்குள்ளானதில் துரைசிங்கம் ஸ்தலத்தில் பலியானதாகவும், மற்ற இருவர் படுகாயமடைந்ததாகவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

துரைசிங்கம் வட்டுக்கோட்டை முன்னாள் எம். பி. யும், உதவிக் கல்வி அமைச்சருமான காலஞ்சென்ற கனகரத்தினத்தின் புதல்வர் என்பது குறிப்பிடத்தக்கது. (மா)

## மரண அறிவித்தல்

### கனகரத்தினம் துரைசிங்கம் (துரை)

(VALUATION DEPARTMENT)



கனகரத்தினம் துரைசிங்கம் அகால மரணமானார். இவர், அன்னலட்சுமியின் (அதிபர், நமசிவாயம் வித்தியாலயம்) அன்புக் கணவரும், சிராணி, பாலேந்திரா (St. Patrics College), அரிச்சந்திரன் (யாழ் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், முன்னாள் வட்டுக்கோட்டைத்தொகுதி பாராளுமன்ற உறுப்பினரும் உதவி கல்வி அமைச்சருமாய் விளங்கிய காலஞ்சென்ற திரு. திருமதி கனகரத்தினத்தின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்ற Capt. சுந்தையா, காலஞ்சென்ற திருமதி விஜயலட்சுமி நமசிவாயம், டாக்டர் பாலசுப்பிரமணியம் (ஆனைப்பந்தி), திருமதி கமலாம்பிகை கதிர்காமசேகரன் (Australia), செல்வராஜா, திருமதி இரட்ணேஸ்வரி மதனகோபாலன், திருமதி சரோஜினி இராமகிருஷ்ண, நரேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற திரு. பொன்னம்பலம் திருமதி பொன்னம்பலம் ஆகியோரின் மருமகனுமாவார்.

அன்னாரது பூதவுடல் இல 6, கந்தபுராண வீதியில் இருந்து இன்று வியாழக்கிழமை (17-2-83) பிற்பகல் 4 மணியளவில் ஈமக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

6222

## மரண அறிவித்தல்

### சாம். தம்பாபிள்ளை

(முன்னாள் அதிபர், ஹைலண்ட்ஸ், அட்டன்; ஓய்வு பெற்ற ஆசிரியர், ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை.)

இவர் கனகமணியின் அன்புக் கணவரும், டொடோ (அவுஸ்திரேலியா), தேவா (சோவலஸ்), ஜயரஞ்சினி (மிருக வைத்தியர், பூண்டுலோயா) ஆகியோரின் அன்புத் தந்தையும், வெளரி (அவுஸ்திரேலியா), கிருபா (A—Z கொம்பியூட்டர்ஸ்), அருள்திலகன் (மிருக வைத்தியர், நுவரெலியா) ஆகியோரின் மாமனாரும், விஜேலி, டிலான், ஜெபதிலகன் ஆகியோரின் அன்புப் பாட்டனருமாவார். அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக பருத்தித்துறை, இரண்டாம் குறுக்குத் தெரு இல்லத்திலிருந்து இன்று (17-2-83) வியாழக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் மெதடிஸ்த சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

6219


## ஹோம் பிஹூன்ஸ் லிமிட்டெட்

### புதிய உல்லாச பஸ்சேவை

தினசரி மாலை 8-30 மணி கொழும்பில் இருந்து----யாழ்ப்பாணத்துக்கு
தினசரி மாலை 7-45 மணி யாழ்ப்பாணத்தில் இருந்து-----கொழும்புக்கு
கண்ணியமான பாதுகாப்பான பஸ்சேவை

யாழ்ப்பாணத்தில் டிக்கற் பெறுமிடங்கள்:-

(1) ஹோம் பிஹூன்ஸ் லிமிட்டெட்
இல: 82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 24310

(2) யாழ். ஐக்கிய வியாபார சங்கம்
இல: 420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 22370—22438—22537

(3) யாழ். மெட்டல் சேல்ஸ் சென்ரர்
இல: 6, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 23596

(4) குயிக் ட்ரவல்ஸ் அன்ட் டூர்ஸ்
சரஸ்வதி கார்டின்ஸ், சேர்ச் லேன், சாவகச்சேரி;
தொலை பேசி இல; 22273. சாவகச்சேரி

கொழும்பில் டிக்கற் பெறுமிடங்கள்:

(1) ஹோம் பிஹூன்ஸ் லிமிட்டெட்
இல: 463, காலி வீதி, கொள்ளுப்பிட்டி.
தொலைபேசி இல: 89190

(2) ரவீந்திரா ஸ்டோர்ஸ்
இல: 285, காலி வீதி, வெள்ளவத்தை.

(3) லங்கா பம்பே சுவீட் ஹவுஸ்,
இல.105,ஒல்கொட் மாவத்தை,புறக்கோட்டை.
தொலைபேசி இல; 22830

(4) நியூ புஷ்பா ஸ்டோர்ஸ்
இல: 127, காலி வீதி. பம்பலப்பிட்டி.
தொலைபேசி இல:88866


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ... 1983-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number Q.B. 100236/81 Eelanaadu - P. O. Box: 49. Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126